1121

15-3-59

தொழில்

INDUSTRY

ஆசிரியர்: K. பெருமாள் உடையா

16 MAR 1959
MADRAS
1121/59

புதிய 25

சிமிண்ட்

ஏ. ஸி. ஸி-சார்மினர் பிராண்ட்

கீழ்க்கண்ட எங்கள் டிப்போக்களில் ரெடி ஸ்டாக்குகள் உள்ளன

- 15, செம்புதாஸ் தெரு, சென்னை-1.
- தி சிமிண்ட் கான்கிரீட் ஒர்க்ஸ், 11-A, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை.
- 283-A, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை.
- 131, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.
- 14, கச்சேரி ரோடு, மைலாப்பூர், சென்னை.
- "ஜெயா மான்ஷன்ஸ்" பூந்தமல்லி ஹைரோடு, சென்னை.
- 139/2, புரசைவாக்கம் ஹைரோடு, சென்னை.
- 40, காளத்தியப்ப முதலி தெரு, சென்னை.
- 139, சூளை ஹைரோடு, சென்னை.
- 105, திருவொற்றியூர் ஹைரோடு, சென்னை.
- 3/95, பிராட்வே, (பிராட்வே டாக்கீஸுக்கு அடுத்தது) சென்னை.

N. B. உங்கள் தேவைகளுக்கு வேலை நடக்கும் இடங்களிலேயே டெலிவரி ஏற்பாடும் செய்யப்படும்.

M. குப்புசாமி நாயக்கர்

இறக்குமதி & ஏற்றுமதியாளர்கள்

15, செம்புதாஸ் தெரு,

சென்னை - 1.

தபால் பெட்டி நெ. 1893

போன் : 21368 & 21369

ஸ்டாக்கிஸ்டுகள் : டாடா/S & L ஜி. ஐ. பைப்புகள் : எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ் சிமிண்ட் ரூபிங் (கூரைகளுக்கான) ஷீட்டுகள் & A. C. பைப்புகள் & பிட்டிங்குகள் முதலியன.

கேரள, கன்னட, ஆந்திர, மத்திய பிரதேச,
தமிழ் நாட்டு மக்களிடையே புகழ்பெற்று
விளங்குவது.

G. K. C. "கணேஷ்"

பனியன்களே!

ஏனென்றால்,

அவை 1 உயர்ந்த நூலால் ஆனது

2 திறமைமிக்க தொழிலாளர்களால் தயார் செய்யப்படுவது.

3 தரத்தில் உயர்வானது.

4 நீடித்து உழைப்பது.

5 சரியான அளவுகள் உடையது.

6 விலையில் மலிவானது.

தயாரிப்பாளர்:

ஸ்ரீ கணேஷ் நிட்டிங் கம்பெனி

அவனுசி ரோடு, த. பெ. எண். 48

திருப்பூர் (S. I.)

"தொழில்" ஆண்டு மலர்

*

உருவாகிக்கொண்டு வருகிறது! மூவர்ண முகப்போடும், கண்கவர் வண்ண ஓவியங்களோடும், கைத்தொழில், கலை, கருத்துரை, கவிதை முதலிய அம்சங்களோடும் ஏப்ரல்மாதம் வெளிவருகிறது. விலை ரூபாய் ஒன்று.

விற்பனையாளர்கள் முன்கூட்டி தங்கள் தேவைக்குப் பதிவு செய்து கொள்ளவும்.

மானேஜர்: "தொழில்" சென்னை-3.

கால் ஆணிக்கு மேல் பூசும் மருந்து

குதிக்காலிலும், பாதத்திலும், பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்தும் ஆணியைப்போல் ஏற்பட்டு நடக்கும் போது பாதமானது தரையில் வைக்க முடியாமலும், கல்பட்டால் துடிதுடிப்பதுமாய் ஏற்படக்கூடிய வியாதியை ஆச்சரியகரமாய் கண்டிக்கக்கூடிய மருந்து இதுவே.

புட்டி விலை ரூ. 5 (தபால் செலவு இனும்)

சிட்டுக்குருவி சத்தின் தாது புஷ்டி லேகியம்

கஸ்தூரி, பச்சை கற்பூரம், விதைகள், வேர்களால் தயாரித்தது தேகத்தை புஷ்டியாக்கி வலுவைத் தரக்கூடியது. ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக்கூடிய லேகியம்.

2 சேர் டின் விலை ரூ 6—0—0

தபால் செலவு தனி.

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்

71-A, ஈ. எச். ரோடு, சென்னை-12

தொழில்

இந்த இதழில்

15—3—59

காகித உற்பத்திக்குச் சலுகை
வேண்டும் ... 5

தொடர் நாவல் :

இதுதான் காதல் ... 17

(துப்பறியும் நவீனம்)

மறைந்த குற்றவாளி ... 25

குடிசைத்தொழிலும், சிறுதொழி
லும் (கட்டுரை) ... 36

சிறு கதைகள் :

நளினி ... 41

துணைவி ... 56

ஆயுத போலீஸ் கதை ... 49

கலைமணம் ... 6[illegible]

கதை, கட்டுரைகளில் வரும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே.

208364

திருமயிலை கபாலீஸ்வரர் பிரமோத்ஸவ நிகழ்ச்சிகள்

மார்ச் 14வ இரவு 10 மணிக்கு விநாயகர் மூஷிக வாகனம்

1 ,, 15 காலை துவஜாரோகணம்—இரவு
உமா மயூர சிவபூஜா தரிசனம்

2 ,, 16 ,, சூரிய விருத்தம்—
இரவு கிளியன்ன வாகனங்கள்

3 ,, 17 ,, அதிகார நந்தி சேவை—
இரவு பூதகி தாருகாசுர வாகனங்கள்

4 ,, 18 புருஷாமிருக சிம்ம புலி வாகனங்கள்—
இரவு காமதேனு மேஷ வாகனங்கள்

5 ,, 19 ,, சவுடல் விமானம்—
இரவு வெள்ளி ரிஷபோத்ஸவ தரிசனம்

6 ,, 20 ,, பல்லக்கு உத்சவம்—
இரவு யானை வாகனம்

7 ,, 21 ,, இரதோத்ஸவம்—
இரவு கோவிலுக்கு எழுந்தருளல்

8 ,, 22 ,, ஞானசம்பந்தசுவாமிகள் எழுந்தருளல்—
இரவு பரிவேட்டை உத்சவம், பஞ்சமூர்த்தி உத்சவம்

9 ,, 23 ,, பஞ்சமூர்த்தி உத்ஸவம்—
இரவு பிக்ஷாடனர் திருக்கோலம்,
பஞ்சமூர்த்தி உத்சவம்

10 ,, 24 ,, நடராஜ பெருமான் உத்சவம்—
இரவு அம்மையார் மயில் உரு

11 ,, 25 ,, உமாமகேசுவரர் தரிசனம்—
இரவு பந்தம்பறி

12 ,, 26 ,, உத்ஸவசாந்தி அபிஷேகம்

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1 | சென்னை, 15—3—59 | இதழ் 22

காகித உற்பத்திக்குச் சலுகை வேண்டும்

காகிதத் தட்டுப்பாட்டைப்பற்றி இதற்கு முன் "தொழில்" தன் தலையங்கத்தில் விவரித்துள்ளது. பல மாதங்களாய் நீடித்துவரும் இந்தக் காகிதப் பஞ்சத்தால், காகிதத்தை மூலப் பொருளாய்க் கொண்ட பல தொழில்கள் முடங்கிப்போயுள்ளன. முக்கியமாய் இலக்கியம் சிறகொடிந்த பறவை நிலையிலிருந்து வருகிறது. அறிவைக் கொண்டு இயங்கி வரும் மனித சமூகத்துக்கு இது ஓர் மகத்தான தடைக்கல். உடனடியாய் நிவர்த்திக்கவேண்டிய இப்பிரச்னையில் இந்திய அரசாங்கம் காலதாமதம் காட்டி வருவது ஒப்பத்தக்கதல்ல. சுதந்தரம் கிட்டிய காலமுதல் இலக்கியத்துறையில் ஈடுபட்டோர் ஓரளவல்ல பெருத்த அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தபால் போக்குவரத்தில் அதிக அளவு கட்டணம் கட்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதால் புத்தக வியாபாரிகள் பாதிக்கப்பட்டனர். 8-அணுவுக்கு வாங்கும் புத்தகத்தை ரூ 1—4—0 செலவு பண்ணி அனுப்புவதானால் அந்தத் தொழில் உருப்படுமா? இம்மாதிரி மாறுபாடான சூழ்நிலைகள் நாளடைவில் படர்ந்து முடிவில் காகிதம் அரும்பொருளாகும் நிலைக்கு வந்து விட்டது.

அந்நியச் செலாவணி திட்டத்தால் வெளிநாட்டுச் சரக்குகளைத் தாராளமாய் இறக்குமதி செய்யக்கூடாமலிருப்பது குறித்து அரசாங்கம் கவலை கொள்ளலாம்.

அதனால் மக்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படக்கூடாதல்லவா? தொழில்கள் போதுமான அளவு வளர்ச்சியுறாமையே அந்நிய நாட்டினரை எதிர்பார்க்கும் நிலைக்குக் காரணம்.

சிறு ரக தொழில் துறையில் ஈடுபட்டுள்ளோர்க்குப் போதுமான அளவு உதவி செய்ய அரசாங்கம் தீவிரமாய் ஈடுபட்டால் நாட்டில் 'தட்டுப்பாடு' 'பஞ்சம்' என்ற சொற்களுக்கே இடமில்லாமல் போகும்.

தாழ்வுற்றுக்கிடந்த ஜப்பானிய நாட்டில் அரசாங்கத்தின் ஆதரவில் தொழில்கள் வளர்ச்சியுற்றன. மேல் நாட்டு தயாரிப்பாளர்களோடு போட்டியிட்டு மேலோங்கி நின்றனர் ஜப்பானியர். அரசியல் ரீதியில் இன்று அந்நாடுவீழ்ச்சியுற்றிருந்தாலும், தொழில் துறையில் அதற்குஈடு அதுவாகவே விளங்குகிறது. எனவே, அரசாங்க உதவியின்றி எந்த நாட்டிலும் தொழில்கள் வளர்ச்சியுற முடியாதென்பது தெளிவாய்த்தெரியும் உண்மை.

தற்போதைய காகிதப்பஞ்சத்திற்குக் காரணம் நம் நாட்டிலுள்ள காகித உற்பத்தி தொழில் போதுமான வளர்ச்சி யுறாமையே. அதன் பயனாய்த்தான் நாம் அந்நிய நாட்டுக் காகிதங்களை எதிர்பார்க்கவேண்டியவர்களாயிருக்கிறோம். இந்நிலை உடனடியாய் மாற

வேண்டும். மேல் நாட்டுத் தயாரிப்பாளர்களைப்போல் நம் நாட்டினர் பெருத்த அளவில் காகித உற்பத்தியில் ஈடு பட ஏதுவில்லாத நிலையிலிருப்பதால் 10, 20 டன்கள் தயாரிக்கும் திறனையாவது அடைந்து விடுதல் நலம். ஆங்காங்கு இந்த அளவில் தொழில் பெருக்கம் ஏற்பட் டால் ஒருவாறு தட்டுப்பாட்டை சமாளித்து விடலாம். முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் தொழில் மந்திரி ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் இருவரும் இதேவித அபிப்பிராயங் கொண்டுள்ள தறிந்து அகமகிழ்கிறோம்.

எனவே, நமது அரசாங்கம் சிறுரகதொழிலுதவி அடிப்படையில் விரைவாக காகித உற்பத்தித் தொழில் வளர்ச்சிக்கு ஆவனச் செய்தல் வேண்டும். பண உதவி யோடு தொழில் நுட்ப உதவியும் கிடைக்குமாறு செய்தல் அவசியம். பாலொத்த வெண்ணிறகாகிதங்களை உபயோகித்து அனுபவப்பட்டுப் போயுள்ளவர்களுக்கு பழுப்பு நிற காகிதங்கள் திருப்தி தருவதாயில்லை.

பழுப்பு நிறம் பால் நிறமாய் மாறவேண்டும். தரத்தி லும் உயர்ந்திருக்கவேண்டும். அவற்றிற்கும், பெருவாரி உற்பத்திக்குமே தொழில் நுட்ப உதவி தேவை.

அரசாங்கம் கவனித்து ஆவன செய்யுமென்றெதிர் பார்க்கிறோம்.

மண்பாண்ட தொழிலுக்கு ஆலோசனைக் குழு தேவை

மண்பாண்டத் தொழிலாளர்க்கு ஏற்பட்டுள்ள குறை கள் பற்றியும், அவற்றை அரசாங்கத்தினர் உடனடியாய் நிவர்த்திக்க வேண்டியதின் அவசியத்தைப்பற்றியும் இதற்கு முன் 'தொழில்'பத்திரிகைவிவரித்துள்ளது.சிறுரக தொழில் முன்னேற்றத்துறையில் முதன்மைஸ்தானம் வகிப்பது அந்தத் தொழில், சென்னையிலும் இதர நகரங்க ளிலும் வசிக்கும் மண்பாண்ட உற்பத்தியாளர் எத்தனை

யோ வகைகளில் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தொழிலை நடத்திவருகிறவர்கள் பிற்பட்டவகுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. நகரவிஸ்தரிப்புத்திட்டத்தின் கீழ் திறப்பு வெளிகளெல்லாம் அடைப்பு வெளிகளாக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் வசித்தக் குடிசைகள் மாத்திரமல்ல; அவர்கள் சூளைக்காக உபயோகித்த விடங்களெல்லாம் புதிதாய் நிர்மாணிக்கும் கட்டடங்களுக்கென எடுத்துக்கொள்ள முயற்சிக்கப்படுகிறது. அவர்கள் தொழிலுக்கென மண் எடுத்த விடங்களும் மறைக்கப்பட்டுவருகின்றன. இவற்றுலெல்லாம் மண்பாண்ட உற்பத்தியாளர் ஜீவனோபாயத்திற்கே வகையற்றுத்தவிக்கும் நிலை எற்பட்டுள்ளது.

இந்திய நாட்டின் புராதன மானதும், புனிதமானதுமான அந்தத்தொழில் நசிப்பதென்பது நாட்டின் பண்பைக் கெடுத்துக்கொள்வதாகவே முடியும். உணவுக்கான தானிய வகைகளைத்தருகிறுன் விவசாயி. அவற்றைப் பக்குவப்படுத்தும் பாண்டங்களைத்தருகிறுன் மண்பாண்டத்தொழிலாளி. விவசாயியின் பாதுகாப்பும் வளர்ச்சியும் நாட்டிற்கு எவ்வளவு அதிமுக்கியமோ, அவ்வளவு அதி முக்கியம் வாய்ந்தவர்கள் தாம் மண்பாண்டத்தொழிலாளிகளும். விவசாயச்சாதனைகளுக்கு அரசாங்கம் எவ்வளவு அக்கறையும், ஆர்வமும் நாட்டுகிறதோ, அதே அளவில் மண்பாண்டத்தொழில் செழிக்க ஊக்கமும், உருவான உதவிகளும் செய்யப்பின் வாங்குதல் கூடாது.

தற்போது குடியிருப்பு வசதியற்றும், தங்கள் தொழிலுக்கான சூளைப்போடும் தனியிடவசதியின்றியும் அவதிப்படும் மண்பாண்டத் தொழிலாளர்க்கு தனி காலனியமைத்துத் தருதல் வேண்டும். மண்ணெடுக்கும் வசதியும், சூளைப்போடும் வசதியும் உள்ளவிடத்தில் அத்தகைய காலனி அமைதல் வேண்டும். தொழிலுக்கு அதிமுக்கிய தேவைகளான விறகு, விராட்டி முதலியன அகவிலையில் கிடைப்பதாய் இருப்பதால் பொருளுதவி செய்யவேண்டியதும் அவசியமே. இந்த உதவிகளெல்லாம்உடனடியாய்க் கிடைக்குமாறு செய்தால்தான் புராதனத் தொழிலாள மண்பாண்ட உற்பத்தித் தொழில் நிலைக்கும்—சிறக்கும் செழிக்கும்.

மண்பாண்டம் உற்பத்தி செய்பவர்கள் இடறின்றி வாழவும், தொழில் சுமுகமாய் நடைபெறவும் அரசாங்கம் அத்தொழிலில் பரம்பரையாய் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊக்கமளித்து உத்ஸாக முறச்செய்தல் வேண்டும். இத்தொழிலில் பல்லூழிகாலமாய் ஈடுபட்டுள்ளவர்கள் குலாலர்கள், அவர்களில் முக்கியஸ்தர்களைத் தேர்ந்தெடுத்து ஆலோசனைக் குழுவமைத்து உருவான திட்டங்களை வகுத்து செயல்படுத்த அரசாங்கம் முன் வருதல் வேண்டும். பின்கண்ட முக்கியஸ்தர்களைக்கொண்டு ஆலோசனைக் குழுவமைத்தல் நலம்.

ஸ்ரீமான்கள் A. S. சுப்பராஜ் M.L.A., A. S. S. காசிராஜ், S. பக்கிரிசாமி பிள்ளை M.L.A.B.K. நல்லசாமி M.L.C.W. கன்னியப்ப உடையார், V. தர்மலிங்கசெட்டியார் B. A.B.L.,M.A.S. ராமலிங்கம், S. சச்சிதானந்தம் பிள்ளை M. A. L. T. T. M. மாரியப்ப வேளார் M. தியாகராஜன், P. V. தர்மலிங்கம் பிள்ளை, M.C. கன்னியப்பன், வள்ளி செட்டியார் B.A.B.L.;M. முனுசாமி உடையார் B. A.; U. முத்துசாமி உடையார், T. N. ரங்கசாமி, K. N. சம்பந்த உடையார், T. M. வையாபுரி செட்டியார், M. T. மாரியப்பன், A. S. ராமசாமி, A. ராமசாமி உடையார்.

அட்டைப்பட விளக்கம்

இரும்பை காந்தம் இழுப்பதுபோல் எழில் மங்கையின் வீணையின் இன்னிசை நாதம் தென்றலில் தவழ்ந்து சென்று, எங்கோ இருந்த கவிஞனை அங்குவரச் செய்தது. இன்னிசைக்குள்ள இணையற்ற சக்தியை அவனும் உணர்கிறன்; அவளும் உணர்கிருள்.

"கண்ணொடு கண்ணிணைக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனுமில" என்ற நிலையில் வாய் திறந்துப்பேசாமல் இருவர் கண்களும் உறவாகி இதயவேட்கையைப்பகிர்ந்து கொள்கின்றனர்.

ரஷ்ய பொம்மலாட்டம்

ரஷிய பொம்மலாட்ட தியேட்டர் குழந்தைகளுக்கென்று 27 ஆண்டுகளுக்கு முன் நிறுவப் பட்டதாகும். இன்று இம்மாதிரி நூறு பாவைக்கூத்து கோஷ்டிகள் சோவியத் நாடு முழுவதும் இயங்கி வருகின்றன. இவையாவும் சோவியத் கல்வி இலாகாவின் ஆதரவில் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியை பிரதானமாகக் கருதி நடத்தப்பட்டு வருகின்றன.

சென்னை நகர் வந்துள்ள ரஷிய மாணவ கூத்து கோஷ்டியினரின் தலைவர் ஒப்ரசோவ் புதனன்று பத்திரிகையாளர்களுடன் பேசுகையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

ஏர்லைன்ஸ் ஓட்டலில்நடந்த இக்கூட்டத்திற்கு மாநில அரசாங்க தகவலறிவிப்பு இலாகா நெறியாளர் திரு, ஆர். குழந்தைவேலு, மத்திய அரசாங்க தகவலறிவிப்பு அதிகாரி திரு. மூர்த்தி "தொழில்" ஆசிரியர் திரு. கே. பெருமாள் உடையார் மற்றும் நகர பத்திரிகையாளர் பலரும் விஜயம் செய்திருந்தனர்.

ரஷ்ய பொம்மலாட்டம்

10, 11 தேதிகளில் ராஜா அண்ணாமலைமன்றத்தில் கலைஞர்களும், ரசிகர்களும்பொது மக்களும் ஒரு அதி அற்புதமான காட்சியைக் கண்டு களித்தனர். சோவியத் ரஷ்யாவிலிருந்து வந்திருக்கும் பாவைக் கூத்து கோஷ்டியினர் நடித்த "அலாவுதீனும், அற்புத விளக்கும்" என்ற பொம்மலாட்ட நாடகத்தைப் பற்றி வர்ணிக்கவேண்டுமானால் புதிய வார்த்தைகளைத் தான் தேடிப் பிடிக்கவேண்டும்.

பழமொழி

ஒருவரிடத்திலும் பகைமை கொள்ளாமல், யாவரிடத்தும் அன்பு பூண்டொழுகுதல் வேண்டும். —**லிங்கன்.**

நாடக விமர்சனம் :

எம். எஸ், டி. மன்றத்தாரின்

“கவிதா ராஜ்யம்”

[சோ. கருணாநிதி]

“கிரேக்க நாட்டு அரசவையில் யாருக்கு இடம் கொடுத்தாலும் கவிஞர்களுக்கு மட்டும் இடம் கொடுக்க மாட்டேன்” என்று முழக்கமிட்டான் சாக்ரட்டீஸின் மாணவன் பிளேட்டோ. காரணம் கவிஞர்கள் எனப்படுவோர் எல்லாம் வெறும் கற்பனை உலகத்திலேயே மிதப்பவர்கள்; எளிதிலே உணர்ச்சிவயப்படக் கூடியவர்கள். ஆழ்ந்த அரசியற் கருத்துக்களை சொல்லத் தெரிந்த அவர்களுக்கு செய்து காட்டும் ஆற்றல் இல்லை. அந்த அளவுக்கு அவர்களிடையே பொறுமையும் இல்லை என்பதினால்தான். பிளேட்டோவின் இந்த அடிப்படைக் கருத்தை மையமாக வைத்து ஒரு சோதனை செய்து பார்த்திருக்கிறார் நண்பர் வேலவன். நல்ல முயற்சி; வெற்றியும் பெற்றுவிட்டார்.

சோழ வேந்தன் விஜயாலயன் ஆட்சியில் சோழநாடு சிறப்புற்றிருந்தது. தர்மசாலைகளும், அன்ன சத்திரங்களும், இணையற்ற போர்ப் படையும் உறையூரை காவல் செய்தன. ஆனால் இவையெல்லாம் கூடாது என்கிறான் மாபெரும் கவிஞன் கலாசாகர். “தர்மசாலைகள் பணத்திமிரை வளர்க்கின்றதாம். அன்ன சத்திரங்கள் சோம்பேறிகளை அதிகப்படுத்துகின்றதாம். போர் படை நாட்டின் அழிவை எதிர் நோக்கி இருக்கின்றதாம். நான் அரசனானால் இவையெல்லாம் நீக்கப் பெற்று எல்லோரும் சமம்; உழைப்புக்கேற்ற ஊதியம். என்ற நிலையை உருவாக்குவேன்” என்று புரட்சி கீதம் பாடுகிறான் அந்தக் கவிஞன். அவனுக்குத் துணையாக இருக்கிறான் மாறுவேடத்துடன் உறையூர்

கலாசாகரனாக நடித்த
ஸ்ரீ நாராயணசாமி

வந்த கலிங்க வேந்தன். உண்மையை அறிந்த விஜயாலயன், ஆட்சியை கவிஞனிடம் கொடுத்து விட்டு மறைந்து விடுகிறான். கவிஞன் அரசனாகிறான். கலிங்க வேந்தன் அமைச்சனாகிறான்.

வெள்ளியும் தங்கமும் மதிப்பில் குறைத்து நாட்டில் பண்டமாற்று முறையை அமுலாக்குகிறான் கவி அரசன்.

அதனால் ஏற்பட்ட விளைவுகள்? அந்தக் காட்சிகளை நாடகத்தில் நாம் பார்க்கும்போது நமக்கெல்லாம் தாங்க முடியாத சிரிப்பு வருகிறது. ஆமாம்! துணிக்கடைக்காரனிடம் துணியை வாங்கிக் கொண்ட வண்ணான் பண்டம் மாற்றாக உவர் மண்ணையும், கழுதைகளையும் தருவது, குத்துச்சண்டை பயில்வான் பலசரக்குச் சாமான் வாங்கிக்கொண்டு பதிலாக குத்துக்களைக் கொடுப்பது; பூக்காரியிடம் பூ வாங்கிய புலவன் கவிதை ஒன்றைப் பாடிவிட்டுப்போய் விடுவது. போன்ற காட்சிகள் பண்டம் மாற்றத்தால் விளைந்தவை என்பதை உணரும்போது நம்மை மறந்து நாம் சிரிக்கிறோம். நிலைமை விபரீதமாய் போவதைக்கண்ட கவி அரசனின் இதயம் எரிதணலாகிறது. மக்கள் புரட்சி செய்கிறார்கள். கவிஞன் சிறை வைக்கப்படுகிறான்.

இறுதியில் கலிங்க வேந்தனின் மகன்தான் கவி கலாசாகர் என்பதையும், மாதாங்கினிதான் கலிங்க வேந்த

னல் காதலித்துப் பின்பு கை விடப்பட்ட பவானியின் மகள் என்பதையும் சுவைபடக் கூறி விஜயாலயனையும், மாதங்கியையும் மண முடித்து வைத்து கதையை முடிக்கிறார் வேலவன்.

ஒவ்வொரு காட்சியையும் புதிரோடு அமைத்து நாடகத்தை விறுவிறுப்புடன் அமைத்திருக்கிறார் நண்பர் வேலவன். வசனங்களில் சொல்லழகும், கருத்தழகும் எழிலோடு விளையாடுகின்றன.

கலாசாகரனாக நண்பர் நாராயணசாமி அற்புதமாக நடிக்கிறாரே! பேச்சுக்குப் பேச்சு "அவ்வை" யாரின் சாயலல்லவா மிளிர்கிறது. யாருக்கும் தலைவணங்காத கவிஞனின் தோற்றமும், நடிப்பும் இவருக்கு எடுப்பாக இருக்கிறது.

கலிங்கமன்னனாக நடிக்கிறார் பசுபதி. மிடுக்கும் துடிப்பும் தெறித்தோடுகிறது இவரது நடிப்பிலும், பேச்சிலும்.

சோழனை மயக்கவரும் மாதாங்கினியாக வருபவர் அம்ஸவேணி நடிப்பில் காரம் போதாது. மயக்குவிக்கும் எந்த சக்தியும் அவரிடத்தில் இல்லையே! நடிப்பிலாவது இன்னும் பாவ உணர்ச்சிகளைக் காட்டி இருக்கலாம். பேச்சில் கொச்சை தட்டுகிறது.

மற்ற நடிகர்களும் போற்றும்படியாக நடித்திருக்கின்றனர்.

நாடகம் இத்தனை சிறப்படைவதற்குக் காரணம் அதன் அமைப்பாளர் திரு சிவானந்தம் அவர்களே!

திருமதி எம். எஸ். திரௌபதியின் "கவிதா ராஜ்யம்" உண்மையிலேயே தமிழ் மக்களுக்கு அரியதோர் கலை விருந்தாகும். பார்த்துப் பயனடைய வேண்டிய அருமையான நாடகம்.

அறிவிப்பு

இடநெருக்கடியால் இந்த இதழில் கைத்தொழில் முறைகள் வெளிவரவில்லை. அடுத்த இதழில் வழக்கம் போல் வெளிவரும்.ஆ-ர்.

நாடக விமர்சனம் :

தொழிலாளி

சென்னை செயின்ட் மேரீஸ் ஹாலில் 15—2—59 மாலை எண்ணூர் அஷோக் லேலண்ட் தொழிலாளர்கள் "தொழிலாளி" என்ற சமூக நாடகத்தை நடத்தினர். புயலில் சிக்கிச் சீரழிந்த ஓர் குடும்பம் வெளியூர் செல்கிறது. மூத்தபிள்ளை மில் தொழிலாளியாய் பாடுபட்டு தம்பியை படிக்கவைக்கிறான் தங்கைக்கு கல்யாணம் நடத்துகிறான். குடிகாரனை மணந்த தங்கை விதவையாகிருள். தங்கையின் கதியறிந்து வெறுப்புற்ற அண்ணன் தற்கொலை செய்துகொள்ள முயன்று கால் ஊனத்தோடு தப்புகிறான். இவ்வாறு உணர்ச்சிப்பெருக்கோடு செல்கிறது சம்பவங்கள்.

கதை, வசனம், பாடல் இயற்றியவர் கவிஞர் F. S. ராய், அவரே பிரதமபாக மேற்று நடித்தார். அமெச்சூர்களின் நடிப்பு என்றஎண்ணம் ஏற்படாதவாறு எல்லா நடிகர்களுமே திறம்பட நடித்தனர். காட்சிகள் ஜோடனை, அவற்றைக் கையாண்டமுறை பாராட்டத்தக்கவை. நடிகைகள் அவரவர் பாத்திரத்திற் கேற்றவாறு நடித்தும், நடனமாடியும் சபையோரின் பாராட்டு தலைப்பெற்றனர். ஹெலன் சிம்ஸன், எ. எட்வர்ட்தாமஸ் சிவபார்வதி நடனம் சிறப்பான நாடகத்திற்குச் சிகரம் வைத்தது போலிருந்தது.

ஒலிப்பெருக்கி அமைப்பில் இன்னும் கவனம் செலுத்தியிருத்தல் வேண்டும். நாடக ஆரம்பத்தில் தி. மு. க. கட்சிக் கொடி காட்டப்பட்டிருக்கவேண்டியதில்லை. பொதுவாக எண்ணூர் அஷோக்லேலண்ட் தொழிலாளர்கள் "தொழிலாளி" நாடகத்தைச் சிறப்புற நடத்தி வெற்றிப்பெற்றனர் என்பதில் ஐயமில்லை.

—"கோமான்"

பழமொழிகள்

அதிகாரம் மக்களிடத்தில் உள்ளது. அவர்கள் தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிந்து கொள்வோரிடம் அதனைத் தற்காலிகமாகவே ஒப்படைத்துள்ளனர்.

—காந்தி.

சென்னையில்

அலுமினிய தொழிற்சாலை

இத்தாலிய ஸ்தாபனம் ஒன்றின் கூட்டுறவுடன் சென்னை ராஜ்யத்தில் அலுமினியத் தொழிற்சாலையொன்றை ஏற்படுத்துவது சம்பந்தமான யோசனைத் திட்டம் பற்றி ஒரே ஒரு ஸ்தாபனம்தான் விவரம் தெரிவித்திருக்கிறது. சர்க்கார் அந்த யோசனைத் திட்டத்தை கொள்கை அளவில் அங்கீகரித்திருக்கிறார்களென வர்த்தகத் தொழிலியல் மந்திரி ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி ராஜ்ய சபாவில் கூறியுள்ளார். இத்தாலிய ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் அந்த ஸ்தலத்திற்கு விஜயம் செய்துள்ளார்களாம். அவர்களின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறதென்றும் அவர் கூறினர்.

அடுத்த இதழில்:

குமாரி: வெ. ஜலஜலா, பி. ஏ.

எழுதும்

பேட்டி

தொடர் நாடகம் ஆரம்பமாகிறது

Telegrams: Marigold
Phone: 31738.

K. Perumal Udayar

Importer, Exporter &
Manufacturers' Representative
Undertakes to Import
goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை,
இறக்குமதி செய்து கொடுக்கிறோம்.

K. பெருமாள் உடையார்
55, எடப்பாளையம் தெரு,
சென்னை-3.

ராஜகுமாரனை மணக்கும் ஏழைப்பெண்

ஜப்பான் நாட்டுராஜகுமாரனை அசிகிட்டேடவுக்கும், சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணான ஷோடாவுக்கும் 'டென்னிஸ்' பந்து விளையாட்டின்போது காதல் ஏற்பட்டதாம். சாதாரண பெண்ணான அழகி "ஷோடா" அரச குடும்பத்து மருமகளாகப் போகிருள்! அரச குடும்பத்தின் பழக்க வழக்கங்கள், மரியாதைகள், ஆகியவைகள் அவளுக்கு கற்றுக் கொடுக்க, அரசக் குடும்பத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், தினசரி 3 மணி நேரம் பயிற்சி யளிக்கின்றனராம்.

அரசகுடும்ப மதச்சடங்குகள், கோயிலுக்கு போகும் முறை, அரசவை மரியாதைகள், ஒழுக்கங்கள். விதிமுறைகள், அரச குடும்பத்தின் வேலைகள், நடையுடை பாவனைகள், பொது மரியாதைகளை எப்படி ஏற்றுக் கொள்ளுதல், அரசியல் சட்டம், நாட்டுவரலாறு 'பாட்டு, இலக்கியம், பிறமொழி, கையொப்பமிடுதல், ஆகியவை போதிக்கப்படுகின்றனவாம், அரசகுடும்பத்தினர், "ஷோடா" வீட்டிற்குப்போய் விவாக நிச்சயம் செய்தனராம்.

மலாயா சிலோன் அருள் நெறி திருக்கூட்டத்தார்

மலாயாவிலிருந்தும், சிலோனிலிருந்தும் யாத்திராமார்க்கமாய் சென்னை வந்துள்ள அருள் நெறி திருக்கூட்டத்தார் புது டில்லிக்குப் புறப்பட்டுள்ளனர்.

முன் கதை............

உறுப்பினர் * * * *

லலிதா, கணேசன், சுந்தரம், சுசீலா, சாந்தா.

மாஜி அரசாங்க ஊழியரும், தற்போதைய சரஸ்வதி மில் மானேஜருமான சுந்தரத்தின் மகள் லலிதா கணேசனை காதலிக்கிறாள். தாய் மாமன் சிவகுமார் அவர்கள் காதலில் குறுக்கிடுகிறான். பூங்காவில் காதலர்களைக்கண்ட சிவகுமார் சீற்றமடைந்து நிந்திக்க கணேசன் அவனைத் தாக்கி வீழ்த்துகிறான். அந்தச் சமயம் சுந்தரம் அங்கே வர லலிதா மாமன்மேலேயே குற்றத்தை சுமத்துகிறாள். கோபமடைந்த சிவகுமார் சுந்தரத்தை நிந்தித்துவிட்டு வெளியேறுகிறான். அதன்பின் லலிதாவை வெளியே செல்ல சுந்தரம் அனுமதிக்கவில்லை. அந்நிலையில்...

ஓர் நாள் கணேஷ் திடீரென்று சுந்தரத்தின் வீட்டில் நுழைந்து லலிதாவிடம் கடிதமொன்றை கொடுத்து விட்டுப் போகிறான். அதற்குப் பதிலெழுதி அப்போது அங்கே வந்த அவன் தங்கை சாந்தா மூலம் அனுப்புகிறாள். அதைப் படித்ததும் கணேஷ் நிலை தடுமாறி விடுகிறான்............

......பிறகு கடிதம் எழுதி சாந்தாமூலம் அனுப்புகிறான். சாந்தா அதை சுந்தரத்திடம் தந்து விட்டுப் போகிறாள். அதைப்படித்த சுந்தரம் ஆக்ரோஷமடைகிறார். கடிதப்படி கணேஷ் நடு இரவில் காரோடு வர, லலிதா வெளியே வந்து காரில் ஏறுகிறாள். சுந்தரமும், சுசீலாவும் காரை மறித்து விடுகின்றனர். சுந்தரம் கணேஷை அடிக்கிறார். சுசீலா லலிதாவை அடித்து இழுத்துப் போகிறாள்.

* * * * *

அடுத்து நடப்பனவற்றை தொடர்ந்து படியுங்கள்:

கணேசனின் கார் சென்றதும் சுந்தரம் கதவைத் திறந்தார். லலிதா கதவு ஓரத்தில் நின்று கொண்டு கதறிக் கொண்டிருந்தாள். அவள் கால்கள் அந்த இடத்தைவிட்டு நகரவேயில்லை. கீழே தலை சாய்த்து கிடந்தாள்.

"லலிதா! உன் பிடிவாதத்தை விட்டு விடு. அவனை விட நல்ல அழகும் பட்டதாரியுமான கணவனை உனக்கு மண முடித்து வைக்கிறேன்! அவன் சகவாசத்தை மறந்து விடு" என்று சுந்தரம் தன் மகளுக்கு சமாதான மொழிகளை எடுத்துரைத்தார். என்ன விருந்தாலும் பெற்ற மகளல்லவா?

"அப்பா! நான் செய்தது பிழையாய் இருக்கலாம். எனக்கு அப்படித் தெரியவில்லை. கண் நிறைந்த கணவன். உண்மைக் காதலுக்கு ஜாதி, சமயம் வேறு குறுக்கே நிற்கிறதா? வாழ்க்கையில் வாழவேண்டியவர்கள் கருத்தொத்த தம்பதிகள் தானே! அவர்களின் மனம் பண்பட்டதாயிரா விட்டால் வாழ்க்கையில் இன்பம் ஏது? அவரும் விரும்பினார், நானும் விரும்பினேன்! அவர் இசைந்தார், நானும் இசைந்தேன். உன்ன உறவால் எங்கள் திருமணத்தை நீதிக்கு கட்டுப்பட்டு உறுதிவாக்கிக்கொண்டோம். ஐயோ! அப்பா! எங்கள் வாழ்க்கையை சிதைக்கவேண்டாம். அவரையன்றி எந்தப் புருஷனையும் நான் மாலையிடமாட்டேன். எனக்கு கணேஷ்தான் வேண்டும். இல்லையேல் என் மரணம் நிச்சயம். இதுதான் என் முடிவு" என்று கதறிக் கொண்டே ஓடினாள் மாடிக்கு.

சுசிலா லலிதாவை பிடித்து நிறுத்தினாள். "லலிதா! உன் பிடிவாதக் குணத்தை விட்டுவிடு. ஜாதி தவறினா நாம் சம்பந்தம் வைத்துக்கொள்வது? படித்துக் கொண்டிருக்கும் பணக்கார இளைஞர்களைக்கண்டு எத்தனையோ கன்னிப் பெண்கள் வாழ்வைப் பறிகொடுத்து விட்டிருக்கிறார்கள். காதல் நடிப்புக் கண்டு நீயும் மயங்கி விடாதே! நாளை நீ நட்டாற்றில்தான் தவிக்கவேண்டும்! நீ வீட்டிற்கு தலை பெண்ணாய் இருந்து இப்படி பேசுவது சரியாகுமா?" என்று சுசிலாவும் வேண்டிய புத்திமதிகளை சொன்னாள். ஆனால் லலிதா கேட்டால் தானே!

" சுசிலா! உன் மகளைப் பார்த்தாயா? அவள் எனக்கு வேதாந்தம் போதிக்கக் கிளம்பிவிட்டாள். காதலாம்; கத்தரிக்காயாம். என்னிடத்திலே இதெல்லாம் நடக்குமா? நானாகப் பார்த்து எவனுக்குக் கொடுக்கிறேனோ அவனோடுதான் இவள் வாழ்ணும். கணேசனோடு சேர்ந்து வாழும்படி நான் விடப்போவதில்லை. ஆகவேண்டியதை உடனடியாய் நான் கவனிக்கிறேன்" என்று பற்களை கடித்தவாறே போய்விட்டார் படுக்கைக்கு சுந்தரம்.

" அம்மா! இதற்குத்தானா என்னை பெற்று வளர்த்தீர்கள்? மனங்கொண்டவரோடு சேர்ந்து வாழக்கூடவா எனக்கு உரிமை யில்லாமல் போய்விட்டது? ஐயோ! எதற்கம்மா என்னை இதுவரை உயிருடன் வைத்திருக்கிறீர்கள்? என்னை கொலை செய்து விடுங்கள். அப்போதாவது என் ஆத்மா சாந்தி அடையும்" என்று லலிதா முகத்தில் அடித்துக் கொண்டே ஓடிவிட்டாள் தன் அறைக்கு. சுசீலாவும் கண்ணீர் உதிர்த்தபடி உள்ளே சென்றாள்.

19 ❁ மாற்றானை மணக்க மாட்டேன் ❁

மாதம் இரண்டு உருண்டோடியது. மகளாகத் தேடிய கணவனைத் தட்டிக் கழித்த சுந்தரம், அன்றைய நாள் முதல் மாப்பிள்ளை தேடும் படலங்களில் கருத்தை செலுத்தினார். அவர் இஷ்டத்திற்கும் குணத்திற்கும் பிடித்தமானவனும், கௌரவமிக்க குடும்பத்தில் பிறந்தவனுமான சிவசங்கரன் என்ற எம். ஏ. பட்டதாரியான வாலிபனைத் தேர்ந்தெடுத்துவிட்டார். செல்வக் குடும்பத்து பிள்ளை. தாய் தகப்பனுக்கு ஜீவாதாரமாய் நின்று விளங்குபவன். 'சுந்தரம் பிடித்தாலும் நல்ல புளியங்கிளையாகத்தான் பிடித்துவிட்டார்' என்றே எல்லோரும் சொல்லிக் கொண்டனர்.

சிவசங்கரன் பெண்ணைப் பார்க்கவேண்டுமென்று சுந்தரம் வீட்டிற்கு வந்திருந்தான் தன் வீட்டாருடன். லலிதாவுக்கு அழகில் என்ன குறைவா? அவளைக் கண்டதும் ஏன் மயங்காமல் இருக்கமுடியும்? பார்த்தான்—ரசித்தான்! தன்

சம்மதத்தையும் தெரிவித்துவிட்டான். ஆனால் அவன் பார்க்கும்போது லலிதா தன்னை அலங்காரம் செய்து கொள்ளவில்லை. அலங்கோலமாகக் காணப்பட்டாள். இயற்கை உடலழகுக்கு செயற்கை உடை என்ன பிரமாதமா? நகைகள் தாம் ஈடா? அவன் அவள் அழகில் அப்படியே மயங்கி தியங்கி தத்தளித்து விட்டான்.

இரு குடும்பத்தாரும் சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியவைகளை பேசி முடித்துக் கொண்டனர். சுந்தரத்திற்கு மாப்பிள்ளை பிடித்து விட்டது. அவர்களுக்கும் பெண் பிடித்தமாய்விட்டது. பெரியவிடத்து சம்பந்தமானதால் ஆடம்பரத்துக்குக் குறைவில்லாமல் நடத்த எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

சுந்தரம் ஆகவேண்டியதை கண்ணுங் கருத்துமாய் செய்து கொண்டு வருகிறார். திருமணத் தேதி நெருங்கி

விட்டது. எப்படியாவது மகள் கலியாணத்தை முடித்துவிட வேண்டுமென்பது அவர் ஆவல்.

தன் மகளுக்கு வேண்டிய விலை உயர்ந்த ஆடைகள் வரவும் வாங்கி விட்டார். மில் மானேஜரின் பெண் என்றால் எவ்வளவோ பெரிய மனிதர்களும் வருவார்களே என்று தக்கதானதெல்லாம் முன் கூட்டியே தன் வீட்டில் வாங்கி வைத்து விட்டார் சுந்தரம்.

மாப்பிள்ளை வீட்டார் திருமணத் தேதியை குறிப்பிட்டு பத்திரிகை அச்சிட்டு அனுப்பிவிட்டார்கள். சுந்தரம் பிரித்து பார்த்தார். அப்போது அவர் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. திருமணப் பத்திரிகை அதிக விலை மதிப்பிடக் கூடியதாய் இருந்தது.

சுந்தரம் குதூகலத்துடன் லலிதாவை கூப்பிட்டார். லலிதா மாடியில் இருந்து அழுத கண்ணீருடன் இறங்கி வந்தாள். சுந்தரம் அவர் கையில் வைத்திருக்கும் திருமணப் பத்திரிகையை கொடுத்தார். லலிதா துக்கம் கலந்த உள்ளத்தோடு பிரித்து பார்த்தாள்.

''சிரஞ்சீவி : சிவசங்கரனுக்கும்

சௌபாக்கியவதி: லலிதாவுக்கும்''

என்று கொட்டை எழுத்தில் அச்சிடப்பட்டிருந்தது. லலிதா தன் கண்களை மூடிக் கொண்டாள். ஆத்திரத்தை அவளால் அடக்க முடியவில்லை. கோவென்று அழுதே விட்டாள். அவள் கண்களில் கங்கையைப்போல் பெருகி வடியவாரம்பித்தது கண்ணீர். தன் கையில் இருக்கும் பத்திரிகையை மீண்டும் ஆவேசத்துடன் பார்த்தாள். வெதும்பினாள். நதியாக வழிந்தோடிவரும் கண்ணீர் அத் திருமணப் பத்திரிகையை நனைத்தே விட்டது.

''அப்பா! எனக்கேன் திருமணம்? வேண்டாத கணவனை மணந்து கொள்ளச் செய்விப்பதை விட, என் மரண விழாவை நடத்தி மனம் மகிழுங்கள். நீங்கள் நடத்தப் போவது திருமணமல்ல, சாவு மணம்!'' என்று துக்கம்

நெஞ்சையடைக்கக் கூறிய அவள் பத்திரிகையை அப்பால் எறிந்து விட்டு மாடியை நோக்கி நடந்தாள்.

"லலிதா, உனக்குத் தாய் தந்தையர் பெரிதில்லையா? அவர்களை நீ மதிப்பது உண்மையானால் இந்த திருமணத்திற்கு நீ கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும்" என்று கூறியபடி அவளைத் தொடர்ந்தாள் தாய்.

"போங்கம்மா என்னைத் தொல்லைப்படுத்தாதீர்கள்... தனியே விடுங்கள்! எனக்கு ஓய்வு வேண்டும்" என்று கூறியவாறு ஓடினாள் மாடியை நோக்கி. சுசீலா கவலையோடு திரும்பினாள்.

தனியே சென்ற லலிதா கட்டிலில் குப்புற படுத்து கண்ணீர் உதிர்த்தாள். அவள் மனம் சமாதானம் அடைய முடியாமல் தவித்தது.

* * * *

"கருத்துக் கருவூலமாக கிடைக்கப்பட்ட கணவனை ஏற்றுக் கொள்ள உரிமையில்லையென்றால், வேறு எவன் தான் உரிமையாகிவிட முடியும்? பொறுமை, அழகு, அந்தஸ்து யாவும் ஒருங்கே வாய்க்கப்பட்ட என் கணேஷுக்கா உதையும், அவமரியாதையும்? ஐயோ! அன்றைய இரவு அவர்கள் நடந்துகொண்ட மிருகச்செயல்களை யெண்ணிப் பார்த்தாலும் மயிர்க்கூச்செறிகிறதே! அவர்கள் அடித்தபோதும்கூட அவர் பொறுமையை இழக்காமல் ஏற்றுக்கொண்டு விட்டாரே! உண்மைக் காதலுக்காக போராடுகிறோம் என்ற தத்துவத்தை, பெற்றவர்கள் இன்னும் புரிந்துக்கொள்ள முடியவில்லை. இனி அவர்கள் தேவ சுந்தரனையே படம் பிடித்துக் காட்டினாலும், என் கணேஷுக்கு ஈடு இணையேது!" என்று கடந்த சம்பவத்தை நினைத்துக் கொண்டு புரண்டாள் படுக்கையில். அப்போதுகூட புதிய தாய் ஏற்பட்ட சிவசங்கரன் அவள் கண்களுக்கு விருந்தளிக்கவில்லை—இதயத்தை தாக்கவில்லை. அவள் நினைவெல்லாம் கணேசன் சொக்காயை பிடித்து இழுத்து சுந்தரம் அடித்திட்ட பரிதாப காட்சியே கண்முன்னே தோன்றி தோன்றி உருக்குலைய செய்தது. தன் தாய் சீறிய சீற்றமும் தன் மனத்தில் எதிரொலித்தது.

" லலிதா! பெற்றவர்களைவிடவா கணேசன் பாசம் பெரிதாய்விட்டது. நீ அவனுடன் வாழ தகுதியற்றவள் என்று இயற்கையே சிறி எழுந்துவிட்ட பிறகு நீ இன்னும் பிடிவாதம் செய்வது அழகாகுமா? அவர்கள் தேடிய வரன் தான் உனக்கு மண நூலை சூட்டப் போகிறான்! இதில் என்ன சந்தேகம் வேறு இருக்கிறது? நீ கொடுத்து வைத்தது அவ்வளவேதான். உன் காதலன் தகுதியற்றவன் என்று நான் குறை கூறவில்லை. யாரும் மறுக்கவில்லை. நீ ஜாதி முத்திரையிலே சின்னம் பெற வேண்டுமென்று உன் பிதா பிடிவாதம் செய்யும் போது அவர் வார்த்தையை தட்டிக்கழித்து பிறழ முடியுமா? கண்ணுக்குப் பிடித்த கணவன்மார்கள் எத்தனையோ பேர்களைத் தேடிப்பிடித்து விடலாம். ஆனால் பெற்ற தாய், தகப்பனை தேட முடியுமா? உனக்காக அவர்கள் உயிர் துறக்க வேண்டுமென்றால் கணேசன் பல்லவியே பாடிக் கொண்டிரு. இல்லையெனில் அவர்களுக்கு சமாதானம்

செய்யவாவது முயற்சி செய். நானும் உன்னைப்போல் உள்ள ஓர் பெண்தான். நீர்க்கயோசித்துத்தான் சொல்லுகிறேன். ஹும்......போ!......ஏன் விழிக்கிருய்?......" என்று அவள் உருவமே அவள் முன்னே நின்று பேசுவது போன்ற தொனி ஏற்பட்டது அப்போது.

" ஆம்! இதோ போகிறேன். சீராட்டி, பாலூட்டி, தாலாட்டி வளர்த்த தாய் தந்தையரே விரோதமாய் நடக்கின்றனரே? அவர்களைப் போல் வேறு யாருக்கும் தாய் தகப்பன் இடைக்கவேமாட்டார்கள்! அவர்கள் மனம் நோகிருர்கள். பெற்றவர்கள் மனம் நோக நான் நடப்பதும் சரியல்லதான். என் வாழ்க்கையை முடித்துக்கொள் கிறேன்" என்று தானகப் பேசிக்கொண்டாள். அந்த முடிவைத் தெரிவிக்க கீழே ஓடி வந்தாள்.

(வளரும்)

K.P. பரசுராம் பிள்ளை & சன்ஸ்

இரும்பு எஃகு சாமான்கள் உற்பத்தியாளர்கள்

கோவை ஜில்லா "ஈஸ்ட்ராலா" பாட்டரி விற்பனை ஏஜண்டுகள்.

"தி மெட்ராஸ் பேன்சி ஸ்டோர்ஸ்"

பொள்ளாச்சி (கோயம்பத்தூர்)

எல்லா பேன்சி சாமான்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் சரசமாகவும் கிடைக்கும்.

ஜே. ஜி. ராஜு எழுதும்

மறைந்த குற்றவாளி

2 கதவைத்தட்டினான், காணாமல் ஓடினான்.

இரவு மணி இரண்டுக்கு மேலாகியது.

சென்னையிலிருந்து நெல்லூர் செல்லும் சாலையில் உள்ள வியாசர்பாடியை நோக்கி கார் ஒன்று விரைந்து கொண்டிருந்தது. இந்தச் சம்பவம் நடந்தபோது இராக் காலத்தில் வியாசர்பாடி சாலையில் யாரும் நடந்து செல்ல அஞ்சுவார்கள். மாலை வெயில் மறைய ஆரம்பித்ததுமே உழைப்பில்லா பிழைப்பாளிகளான வழிப்பறிக்காரர்கள் ஆட்சி செலுத்த ஆரம்பித்து விடுவார்கள் அந்தச் சாலையில். கிராமாந்திரங்களிலிருந்து தானியங்களையும் காய்கறி வகைகளையும் ஏற்றிவரும் நாட்டு வண்டிகள் கூட சூறையாடப்படும் என்றால் அதிகம் சொல்வானேன். கார்கள், லாரிகள், பஸ்கள் இவைகளைமாத்திரம் அந்த அற்பக் கொள்ளைக்காரர்கள் அண்டுவதில்லை. கிட்ட நெருங்கினால் அந்த நிமிடமே தங்கள் கொட்டம் மட்டமாய்விடுமென்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். அணுக்களாய் இருந்தாலும் அலட்சியம் செய்யாமல் பறித்துக்கொண்டு வெறும் ஆளை அனுப்பிவைக்கும் அந்தக் கொடியவர்கள் வழிப்பறிப்பண்ணுவதிலும் கலை நுட்பத்தைக் காட்டத் தவறுவதில்லை. மாதச் சம்பளம் வாங்கிச் செல்கிறவன். வாரக்கூலி பெற்றுப்போகிறவன்: அன்றாடக்கூலியை வாங்கி வயிறு வளர்க்கும் நிலையிலுள்ளவன் எல்லோரையுமே ஏகதேசமாய் நினைத்து சூறையாடி வந்த அவர்கள் கையாண்ட களவு முறை விசித்திரமானது. விபரீதமானதுங்கூட. வழியோடு செல்லுகிறவனைப்போல் முன்னால்

ஒருவன் போவான். பின்னுல் ஒருவன் தொடர்வான். பேஸின்பிரிட்ஜ் (பாலம்) இறக்கத்தையடைந்ததும், இருவரும் நடுவேபோகிறவனை நெருங்குவார்கள். ஒருவன் கையில் கத்தி பளிச்சிடும். அந்தக் கத்தியின் கூர்பாகத்தை வழிப்போக்கன் வயிற்றை யொட்டி நீட்டிப் பிடித்துக் கொள்வான். மற்றவன் வழிப்போக்கன் சட்டைப்பை, இடுப்பைச்சுற்றியுள்ள பாகங்கள், உள் உடை (அண்டர் டிராயர்) இன்னும் சந்தேகப்படும் மறைவான விடங்களையெல்லாம் தடவி சோதித்துப் பார்ப்பான். கத்தியை நீட்டிப் பிடித்துள்ளவன் அப்போது வழிப்போக்கனை பயமுறுத்தியபடியேயிருப்பான். அந்தச் சமயம் காரோ, பஸ்ஸோ, லாரியோ சாலையில் போனுல் சாதாரணமாய் நின்று பேசிக்கொள்கிறவர்கள் என்று பார்வைக்குப் புலப்படும்படி வழிப்போக்கனைச் சூழ்ந்து நின்று கொள்வார்கள் கொள்ளைக்காரர்கள். அந்தச் சமயம்கத்திவைத்துள்ளவன் "உம்! சத்தம் போட்டால் கத்தி உள்ளே பாஞ்சிடும்" என்று கூறியவாறு சற்று அதிகப்படியாய் கத்தியை வயிற்றில் அழுத்திப்பிடிப்பான். காரோ, பஸ்ஸோ மறைந்ததும் கேட்பாரற்ற நிலையில் தாராளமாய் வழிப்பறியை முடித்துக் கொண்டு அனுப்பிவிடுவார்கள் வழிப்போக்கனை.

இப்பேர்ப்பட்ட கொடியவர்கள் சஞ்சரிக்கும் அபாயமான சாலையில் விரைந்து கொண்டிருந்த கார் வியாசர்பாடிக்குள் நுழைந்து ஓர் மாடி வீட்டின் எதிரே போய் நின்றது.

வெளிச்சம் காட்டாமலும், ஓசையெழுப்பாமலும் ஓடிவந்ததால் கார் ஒன்று வந்து நின்றதையாரும் அறிய ஏதுவில்லாமலிருந்தது.

கார் நின்றதும் கதவைத்திறந்துகொண்டு வெளியே குதித்தான் அதை ஓட்டி வந்தவன். பின்ஸீட்டுக் கதவைத் திறந்து உள்ளே பிரேதம்போல் மூர்ச்சித்துக்கிடந்தவனை இருகைகளாலும் பற்றி இழுத்தபடி வீட்டுவாசலையணுகினுன். அப்போது சந்திலிருந்தபடி நாய் ஒன்று ஆக்ரோஷமாய்க் குரைத்தோடி வந்தது. நாய் பண்ணும் கலாட்டாவினுல் அண்டை அயலிலுள்ளவர்கள் விழித்துக்கொள்வார்கள் என்று எண்ணினுன்போலும் அவன். சட்



டென்று தான் சுமந்துவந்தவனை கீழே போட்டுவிட்டு தெருவாசல் கதவையணுகினன். கதவு நிலையில் பொருத்தியுள்ள அழைப்புமணி (Calling Bell) பித்தானை அழுத்த நிலைப்படியில் ஏறினன். நாயோ தன் கூச்சலை உயர்த்தியபடி அவன்மேல் சீறிப்பாய்ந்தது. முரடனை அவன் தனது வலது காலால் நாயின் முகத்தை நோக்கி முழு பலத்தையும் உபயோகித்து உதைத்தான். நாய் பிராணபாயமான சப்தத்தோடு சந்தில் புகுந்து மறைந்தது. அவனே அழைப்பு மணிப்பித்தானைப் பலமுறை அழுத்திவிட்டு சிட்டாய்ப்பறந்து காரிலேறி ஓட்டினன். கார் சென்னையை நோக்கி விரைந்தது.

அழைப்பு மணியோசை பலமுறை ஒலித்ததால் வீட்டுக்காரர் மன்னர்சாமி தூக்கங்கலைந்து எழுந்து தெருப்புறம் நோக்கி வந்தார். மின்சார விளக்குகளைப் பொருத்திவிட்டு தெருக்கதவைத் திறந்து வெளியே வந்தார்.

தெருவாசலில் வெள்ளை நிறத்தில் ஏதோ விழுந்து கிடப்பது தெரிந்தது. அவர் திரும்பிச் சென்று அலமாரியைத்

திறந்து டார்ச் விளக்கை எடுத்துக் கொண்டு தெருப்புறத்தை யடைந்தார். விளக்கொளியைப் பாய்ச்சி கவனித்ததில் ஓர்மனிதன் விழுந்து கிடப்பதாய் அறிந்தார். முகத்தை கவனித்தார். வானம் இடிந்து தலையில் விழுந்து விட்டது போன்ற அதிர்ச்சியடைந்தார். தன்மகன் பெரியசாமி மண்டையுடைந்து கிடப்பதைக்கண்ட அவர் மனம் என்னிலையிலிருக்கும்?

"பெரியசாமி! அப்பா! பெரியசாமி!" என்று கூவினார். பிரக்ஞை இழந்து கிடப்பவனுக்கு அருமை அப்பாவின் அழைப்போசை எங்கே கேட்கப்போகிறது? செத்து விட்டானோ வென்ற அச்சத்தால் "ஐயோ அப்பா ஐயோ அப்பா!" வென்று அடித்தொண்டையால் கதறினார். வீட்டிற்குள்ளிருந்தவர்களும், அண்டை அயலிலிருந்தவர்களும் அங்கே வந்து கூடினார்கள். பலத்த அடியால் மண்டையுடைந்து போயிருந்தாலும் உயிருக்கு அபாயமில்லையென்பதை உணர்ந்தனர். உடனே அவனை, ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர்.

3 விருந்தும், விபரீதக் கொலையும்

மறைந்து விட்ட குற்றவாளி பஞ்சாமிர்தத்தை தேடித் தேடி போலீஸ் இலாகாவே அலுத்துவிட்டது. இந்தியாவின் கீழ்க்கோடியிலிருந்து மேல் கோடிவரையில் சல்லடைப்போட்டு சலித்துப்பார்த்து விட்டனர் போலீஸார். அவன் இந்திய பூமியில் இருப்பதாய் நினைக்கக்கூட ஏதுவில்லாமலிருந்தது. பஞ்சாமிர்தம் பாகிஸ்தானுக்குள் புகுந்து விட்டிருப்பான் என்று அபிப்பிராயம் தெரிவித்தோர் பலர். போர்ச்சுக்கீஸியர் பிடியிலிருக்கும் 'கோவா, டாமன், டையு'ப் பிரதேசங்களுக்குள் புகுந்துவிட்டபின் வீணாக இந்தப் போலீஸார் தேடியலைகின்றனர் என்று பச்சாதாபப்பட்டோர் மற்றும் பலர். கொலைக்காரன் என்றும், கொள்ளைக்காரன் என்றும், ஆள்மாறாட்டக்காரன் என்றும் பேரெடுத்து விட்டிருந்த அவனைப்பற்றி பற்பல விதக் கதைகளை சென்னைவாசிகள் மாத்திரமல்ல; சென்னை மாகாணத்திலுள்ள சிற்றூர் வாசிகளெல்லாம் பேசிக்கொண்டனர். அவன் ஆரம்பத்தில் சென்னை நகரில் 'மரகதம் ஜுவல்லரி'

என்ற பிரபல நகைக்கடையை சீரும், சிறப்புமாய் நடத்தி வந்தான். சைனுபஜாரிலுள்ள நகைக்கடைகளில் மிகப் பெரியதும், பரம ஏழையிலிருந்து பாரி பணக்காரன் வரையில் மரகதம் ஜுவல்லரியைப்பற்றியும், அதன் உரிமையாளனை பஞ்சாமிர்தத்தைப் பற்றியும் வேடிக்கையாயும், வியப்பாயும் பேசிக்கொள்வர். தியாகராயநகர் உஸ்மான் சாலையில் அரண்மனையை யொத்த பங்களாவில் வசித்து வந்தான் பஞ்சாமிர்தம். ரோல்ஸ்ராய்ஸ் காரில் சவாரிபண்ணி காலையில் ஒரு முறையும், மாலையில் ஒருமுறையும்மரகதம் ஜுவல்லரிக்கு வந்து சொற்ப நேரமிருந்துவிட்டுத் திரும்பி விடுவான். சென்னை நகரத்தில் எத்தனைப் பேட்டைகள் உண்டோ, அத்தனைப்பேட்டைகளிலும் அவனுக்குக் கட்டடங்கள் இருந்தன. சுமார் இருபது வருடங்களுக்கு முன் ஒட்டுக்கடை வைத்து அன்றுடம் கிட்டும் சொற்பவருவாயைக்கொண்டு காலங்கழித்து வந்த பஞ்சாமிர்தம், எப்படித்தான் இவ்வளவு பெரும் பொருளைத்தேடினுனே வென்று எல்லாருமே வியப்படைந்தனர். நல்லவனுயிருந்தாலும், தீயவனுயிருந்தாலும் திடீரென்று பணக்காரனுகி விட்டால் சிலர் பொருமையோடு, கெட்ட எண்ணமும் கொள்வது சகஜம் தானே! பஞ்சாமிர்தம் கள்ள கோட்டு அச்சிட்டுப் பணக்காரனுகி விட்டான் என்று கதை கட்டி விட்டவர்களும் உண்டு. கொள்ளைக்காரர்களிடமிருந்து வாங்கும் கள்ள நகைகளால் ஏராள பொருளைத் திரட்டி விட்டான் என்று வம்பளந்து விட்டவர்களும் உண்டு. செம்பை தங்கமாய் மாற்றிவிடும் வாத வித்தையை வடநாட்டிலிருந்து வந்திருந்த பைராகி யொருவர் சொல்லிக் கொடுத்து விட்டதால் மனுக்கணக்கில் செம்பு உலோகத்தை தங்கமாய் மாற்றிவிடுவதாயும் வதந்தி பரப்பினர் மற்றும் பலர். எனினும், யாருடைய கதையும், வம்பளப்பும் வதந்தியும் பஞ்சாமிர்தத்தை பாதித்து விடவில்லை. பெரும் பிரபுவாகிவிட்ட அவனை மற்ருரால் என்ன செய்துவிட முடியும்? பணம் பத்தும் செய்யக்கூடிய மகிமையுள்ளதல்லவா?

அப்பேர்ப்பட்ட பஞ்சாமிர்தம் இப்போது எப்படி கொலைக்காரனுயும், கொள்ளைக்காரனுயும் மாறினுன்.? சாதாரண கான்ஸ்டபிளிலிருந்து கவர்னர் பதவி வகிப்பவர் வரையில் ஊருக்குப் பெரிய மனிதன் என்று மதித்தார்களே,

அந்தப் பெரிய மனிதன் இப்போது எப்படி பயங்கர மனிதன் என்று மற்ருேர் நினைக்குமாறு நடந்து கொண்டான்? இம்மாதிரி கேள்விகள் பலர் உள்ளங்களிலும் உதித்தெழுந்தன.

பத்திரிகைகளில் வெளிவந்தச் செய்திமைக் கொண்டு யாராலும் எதையும் தீர்மானிக்க முடியவில்லை. உண்மையில் நடந்தது என்னவென்பதையறிவதில் ஆர்வங்காட்டியவர்களே அதிகம். ஏனெனில், பஞ்சாமிர்தம் பார்வைக்குப் பரம சாதுவாய்க் காணப்படுவான். பேச்சிலே இனிமையும், முகத்திலே மந்தகாசமும் நிரந்தரமாய் இடம்பெற்றிருக்கும். கோடீசுவரர்கள், லட்சாதிபதிகள் போன்ற மாபெரும்மனிதர்களோடு சமதையாய்ப் பழகிய பெரிய மனிதன், கொலைகாரனும், கொள்ளைக்காரனும் மாறினுன் என்ருல் அதை யார் தான் நம்புவார்கள்?

பஞ்சாமிர்தம் ஒன்றிரண்டல்ல, பலகொலைகளைச் செய்தவன், கொள்ளைகளையும் நடத்தியவன் என்பதற்கு பல ருசுக்கள் தங்களிடமிருப்பதாய் போலீஸ் தரப்பில் கூறப்பட்டது. பத்திரிகைகளில் வந்தச் செய்திகளை பொதுமக்களில் பெரும்பாலோர் நம்பவே செய்தனர்.

சிலோனில் பிரபல வைரவியாபாரியாய் விளங்கிவந்த நவரத்னம் இந்தியாவுக்கு வர்த்தக சம்பந்தமாய் வந்திருந்தவர் பல மாதங்களாகியும் ஊருக்குத் திரும்பவில்லை, அவரைப்பற்றிய தகவல் எதுவும் கிட்டாதுபோகவே, சிலோனிலிருந்த அவர் உறவினர்கள் இந்திய போலீஸில் புகார் செய்திருந்தனர். போலீஸ் புலன் விசாரணையில் அவர் சென்னையில் ஒருவாரகாலம் தங்கியிருந்ததாயும், கடைசியில் அவர் எங்கே போனுர், எப்படியானுர் என்ற விபரம் புரியவில்லை யென்பதாயும் அறிந்தனர். அவர் தங்கியிருந்த முகாரி ஒட்டல்காரர்களும், நகைக்கடை வியாபாரிகள் சிலரும் கூறியவிபரப்படி அவர் சென்னையைவிட்டு வெளியூர் எதற்குமே புறப்படவில்லை யென்று தீர்மானித்தனர். வெளியூர் எதற்குமே புறப்படாதிருந்த அவர் சென்னையில் எங்கேபதுங்கிக்கொண்டிருக்கப்போகிருர்? பல லட்சரூபாய் பெறுமான முள்ள சொத்துக்கு அதிபதியான அவர், எக் காரணத்தை முன்னிட்டும் பதுங்கியிருக்கவேண்டிய

தில்லையே! சுகவாசி, ஆடம்பரக்காரர். உலக சுகங்கள் எத்தனையுண்டோ அவ்வளவையும், அனுபவித்துவிட ஆசைப்படுகிறவர். அப்பேர்ப்பட்ட மனிதன் மறைந்து வாழமனந் துணிவாரா? அவர் எங்கெங்கே போனார், யார் யாரிடமெல்லாம் தொடர்பு கொண்டிருந்தார் என்ற விபரங் களைச் சேகரிப்பதில் போலீஸார் தீவிரத்தைக்காட்டினர்.

ஆடம்பரப் பிரியரான நவரத்னம் ஆடம்பரத்தில் தனக்குச் சமதையானவர்களோடுதான் பழகிவந்தாரென் றும், முக்கியமாய் அவர் பஞ்சாமிர்தத்தோடுதான் நெருங் கிப்பழகி வந்தார் என்றும் போலீஸாருக்குத் தகவல் கிடைத்தது.

போலீஸார் பஞ்சாமிர்தத்தை விசாரித்துப்பார்த்தனர். தன்னிடம் எத்தனையோ பெரிய மனிதர்கள் வந்துப் பழகு வதாகவும், அவர்கள் எங்கே போனார்கள்? என்ன செய்கி றார்கள்? என்ற விபரங்களைக்கண்டறிவது தன் வேலையல்ல வென்பதாகவும் அவர் கூறிவிட்டார்.

பெரிய மனிதன் வாய்மொழியானதால் மறுத்துப்பேச துணிவு கொள்ளாமல் போலீஸார் சென்று விட்டனர். மற்றுமோர் சம்பவம் போலீஸாரை வியப்பில் ஆழ்த்திய தோடு, பொதுமக்களையும் அதிர்ச்சியுறச் செய்தது.

கோவிந்ததாஸ் துவாரகாதாஸ் என்ற பம்பாய் வைர வியாபாரி சென்னைக்கு வந்திருந்தார். சமீபத்தில் ஜமீன் ஒழிப்பிற்கு உள்ளாகி முன்போன்ற ஆடம்பர வாழ்க்கைக்கு வழியின்றி தன் முன்னோர்கள் தேடி வைத்த பல லட்ச ரூபாய் பெறுமானமுள்ள உயர்தர வைரங்களை அவரிட மிரு ந்து வாங்கியிருந்தான் பஞ்சாமிர்தம். தன்னிடம் சிறந்த வைரங்கள் விற்பனைக்கிருக்கும் விபரத்தை பம்பாயிலுள்ள வியாபாரிகளுக்கு அறிவித்திருந்தான் பஞ்சாமிர்தம். அதை வாங்கவந்திருந்த வியாபாரிகளில் முக்கியமானவர் கோவிந்த தாஸ் துவாரகாதாஸ். பல வியாபாரிகள் போட்டிப் போட்ட தால் வைரங்கள் அதிகவிலையிலேயே விற்பனையாயின. கோவிந்ததாஸ் துவாரகாதாஸ் வந்துள்ள விடத்தில் மற்ற வியாபாரிகளால் போட்டிப்போட முடியாதென்பது எல்லோ ரும் அறிந்த உண்மை. வழக்கம்போல் கோவிந்ததாஸ்

துவாரகாதாஸே எல்லா வைரங்களையும் வாங்கினர். மற்ற வியாபாரிகள் எல்லோருமே பெருத்த ஏமாற்றமடைந்து திரும்பிச் சென்றனர். வியாபாரம் முடிந்த மறுநாள் பஞ்சாமிர்தம் கோவிந்ததாஸ் துவாரகாதாஸுக்கு குட்லாண்ட் ஓட்டலில் விருந்தொன்று அளித்தான். கோடீசுவரர்களாகவோ, இலட்சாதிபதிகளாகவோ உள்ளவர்கள் மாத்திரமே குட்லாண்ட் ஓட்டலில் இம்மாதிரி விருந்தளிப்பு வைபவங்களை நடத்தமுடியும். பஞ்சாமிர்தம் நடத்திய விருந்திற்கு நகரத்திலுள்ள பெரிய மனிதர்களெல்லாம் விஜயம் செய்திருந்தனர். வெளிநாடுகளிலிருந்து வரும் அரசாங்க விருந்தினர்களுக்கு அளிக்கும் விருந்துகளுக்கு ஒப்பானதாய் இருந்தது பஞ்சாமிர்தம் அளித்த விருந்து. இன்சுவை விருந்து மாத்திரமல்ல. இன்னிசைவிருந்தும் நடந்தது. சிலர் நாட்டியத்தை ரஸிப்பார்கள் என்ற எண்ணத்தால் ககனகுமாரி யென்ற நாட்டியமாதின் நடனத்திற்கும்ஏற்பாடு செய்திருந்தான் பஞ்சாமிர்தம், இந்தக் கோலாகலங்களை யெல்லாம் அனுபவித்துவிட்டு அவரவர் வீடுகளுக்குத் திரும்பும்போது இரவு பத்து மணிக்கு மேலாகி விட்டது.

முக்கிய விருந்தினரான கோவிந்ததாஸ் துவாரகாதாஸ் தன் விடுதிக்குத் திரும்பப் புறப்பட்டார், பஞ்சாமிர்தம் அவரை வழிகூட்டி வந்து தன் காரில் ஏற்றியனுப்பினன்.

அவர் சென்னைக்கு வந்து மூன்று நாட்களாயின. இரண்டு நாட்கள் வரையில் சௌகார்பேட்டையிலுள்ள தன் உறவினர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்தார். வைரவியாபாரம்முடிந்ததும்அவர் பம்பாய்க்குப்புறப்பட ஆயத்தமானர். தன்னிடம் வியாபாரம் செய்ததின் மூலம் நெருங்கிய நண்பராய் விட்டபடியால் அவர்தன் பங்களாவில் தங்கியிருந்து, தான் அளிக்கும் விருந்திலும் கலந்துகொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொண்டான் பஞ்சாமிர்தம். விநயமான வேண்டுகோள் ஆனதால் மறுக்க முடியாமல் சம்மதித்தார் கோவிந்ததாஸ் துவாரகாதாஸ்.

மறுநாள் காலையில் விமான மூலம் பம்பாய்க்கும் புறப்படவேண்டியவர், ஆனதால் விருந்து முடிந்ததும் அவர் தன் வெளி அலுவல்களையெல்லாம் முடித்துக்கொண்டு தியாகராயநகரிலுள்ள பஞ்சாமிர்தத்தின் பங்களாவை

நடைந்தபோது இரவு மணி பன்னிரண்டுக்கு மேலாகியது. இரவு வெகு நேரமாகிவிட்டதால் அவர் சிற்றுண்டிகூட புசிக்கவில்லை. வெறும் பாலை மட்டும் அருந்திவிட்டுப் படுக்கைக்குச் சென்றார். அவரோடு பம்பாயிலிருந்து வந்திருந்த கிஷோரிலால் என்ற வேலைக்காரன் எஜமானர் படுக்கைக்குப் போன பின் வெளிப்புற நடையில் ஜமக்காளத்தை விரித்துப் படுத்தான்.

* * * *

மறுநாள் பகல் மணி ஒன்று ஆகியது. செங்கற்பட்டு போலீஸ் உயர் அதிகாரியிடமிருந்து சென்னை போலீஸ் கமிஷ்னர் பாலகிருஷ்ணனுக்குத் தந்தியொன்று கிடைத்தது. செங்கற்பட்டுக்கு வடக்கே மலையடிவாரத்தில் இரண்டு பிரேதங்கள் இடப்பதாயும், அது வடநாட்டு மார்வாரிகளின் பிரேதங்களாய் இருக்கக் கூடுமென்று தாங்கள் சந்தேகிப்பதாயும், ஆகையால் சென்னை போலீஸ் அதிகாரிகள் நேரில் வந்து பார்வையிட வேண்டும் என்பதாயும் அந்தத் தந்தியில் கண்டிருந்தது.

உடனே போலீஸ் கமிஷ்னர் பாலகிருஷ்ணனும், அவரின் உதவி அதிகாரிகளும் செங்கற்பட்டை நோக்கி விரைந்தனர்.

போலீஸார் தீவிரமாய்ப் புலன் விசாரணையில் இறங்கியதின் பயனாய் ஓரளவு தகவல் கிடைத்தது. இறந்தவர்கள் கோவிந்ததாஸ் துவாரகாதாஸும், அவரின் வேலைக்காரன் கிஷோரிலாலுமே யென்பதுதான் அந்தத் தகவல்.

கோவிந்ததாஸ் துவாரகாதாஸ், கிஷோரிலால் இருவரின் கொலைகளைப்பற்றி............

1. கோவிந்ததாஸ் துவாரகாதாஸ் ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதி தன் வேலைக்காரன் கிஷோரிலாலுடன் சென்னைக்கு வந்தார்.
2. 8, 9 தேதிகளில் பஞ்சாமிர்தத்திடமிருந்த வைரங்களை வாங்குவதில் மும்முரமாயிருந்தார்.

3. 9-ம் தேதி மாலை எல்லா வைரங்களையுமே அவர் வாங்கி விட்டார். அன்று இரவு முதல், அவர், சென்னை தியாகராய நகர் உஸ்மான் சாலையிலுள்ள பஞ்சாமிர்தத்தின் பங்களாவில் தங்கினார்.

4. 10-ம் தேதி மாலை குட்லாண்ட் ஓட்டலில் பஞ்சாமிர்தத்தால் அவருக்கு விருந்தளிக்கப்பட்டது. விருந்து முடிந்தபின் அவர் சௌகார்பேட்டையிலுள்ள தன் உறவினர்களையும், நண்பர்களையும் சந்தித்தார்,

5. அதன் பின் அவர் எங்கே போனார்? யாரால் கொல்லப்பட்டார்? என்ற விபரம் எதுவும் புரியவில்லை. வேலைக்காரன் கிஷோரிலால் தன் எஜமானரோடு எங்கும் சென்றதாயும் தெரியவில்லை. இருவரும் ஒரே சமயத்தில் கொல்லப்பட்டார்களா? வெவ்வேறு சமயங்களில் கொல்லப்பட்டார்களா? ஒரே இடத்தில் கொல்லப்பட்டார்களா? வெவ்வேறு இடங்களில் கொல்லப்பட்டு ஒரே இடத்தில் கொண்டு வந்து போடப்பட்டார்களா?

6. கொலையுண்டவர்களிடமிருந்து எந்தெந்தப் பொருள்கள் களவாடப்பட்டன வென்ற விபரம் தெரியவில்லை.

7. கோவிந்ததாஸ் துவாரகாதாஸோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த பஞ்சாமிர்தத்திடமிருந்து உருவான தகவல் எதுவும் கிரகிக்க முடியவில்லை.

8. கோவிந்ததாஸும், கிஷோரிலாலும் தங்கள் மூட்டை முடிச்சுகளோடு தன் பங்களாவைவிட்டு 10-தேதி இரவு பன்னிரண்டு மணிக்குப்புறப்பட்டு விட்டார்களென்று பஞ்சாமிர்தம் சொல்லுகிறார். போலீஸார் அதை நம்பவில்லை.

(வளரும்)

விஜயம் செய்யுங்கள்!

எங்கள் கலைக்கூடத்தில் உருவச்சிலைகள்,

வண்ண ஓவியங்கள் அவரவர்

விருப்பப்படி தயாரித்துத்

தருகிறோம்.

★

உரிமையாளர் :

R. T. கிருஷ்ணமூர்த்தி

அணுகுக :

வ. உ. சி. கலைக்கூடம்

(அரசினர் உதவி பெற்றது)

பூந்தோட்டம்,

35/60, சந்நிதி தெரு, வடபழநி,

சென்னை.

" குடிசை தொழிலும் - - - - சிறு தொழிலும் "

—[ஒய். வி. விஸ்வேஸ்வரன், எம். ஏ.]—

நம் நாடு ஓர் "விவசாய நாடு", நம் நாட்டு மக்கள் பெரும்பாலோர் விவசாயிகள். இந்திய விவசாயம் வருண பகவானின் கருணையையே நம்பியிருக்கிறது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. நிலத்தை நம்பி வாழும் மக்களின் எண்ணிக்கையை கணக்கிடமுடியாது. எதிர்பார்த்த காலத்தில் மழை பொழியவில்லை என்றால் ஏமாற்றமடைந்த விவசாயியின் ஏழ்மை நிலைமையை என்னவென்று கூறுவது?

சில நாட்களில் அறுவடை இல்லை யென்றால் விவசாயியின் நிலைமை சீர்கேடு அடைந்து, வீண் பொழுது போக்குவதற்கு ஏதுவாகிறதல்லவா. இந்நேரங்களிலேயே சிறு தொழில், குடிசைத் தொழிலின் மகத்துவம்வெளிவருகிறது. ஆம்! அந்நேரங்களில் விவசாயியின் நண்பன் "சிறு தொழில்".

நம் நாட்டின் "சிறு தொழில்" "குடிசைத் தொழிலின்" சிறப்புப் பற்றி 1918ல் தொழிற் கமிஷன் அறிக்கையிலிருந்து சமீபத்தில் "கார்வே" கமிட்டி அறிக்கைவரை யாவரும் அறியாதவர் கிடையாது. இத்தொழில்களில் நம் மக்களின் தேர்ச்சி முதன்மையானது. நம் மக்களின் நுண்ணிய அறிவு ஆங்கிலேயராலும், மற்றும் பல அந்நியநாட்டினராலும் பாராட்டப்பெற்றது. இதுபற்றி நம் நாட்டு சரித்திரத்திலே படித்தோம். இன்று நம் சுதந்தர இந்தியாவிலே இதன் சிறப்பை காண்கிறோம். சிறு தொழிலுக்கு அரசாங்கம் அளிக்கும் இடம் போற்றத் தக்கது.

"பத்தமடை" பாய் முதல், "பனாரஸ்" சாரி, மற்றும் அலிகார் பூட்டுகளிலிருந்து அவுரங்கபாத் புடவைகள், திண்டுக்கல் சுருட்டு, காஞ்சி

புரம் சேலைகள், இதுபோன்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட "சிறு தொழில்", குடிசைத் தொழில்" பொருள்கள் நம் பாரதநாட்டிலே செய்யப்படுகின்றன.

அன்று ஆங்கிலேய ஆதிக்கத்தில் நசுக்குண்டு, வளர்ச்சிபெற வசதியில்லாத இத்தொழில்களை நம் பாரத சர்க்கார் தக்க கவனம் செலுத்திமறுபடி அத்துணை தொழில்களுக்கும் போதுமான கவனத்தினால் வளம் பெற ஆவன செய்துள்ளது குறித்து நாம் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டியதே. சிறு தொழில்களுக்கு நம் ஐந்தாண்டு திட்டங்களிலே அளித்த இடம் சிறப்பானது. அன்று அரசாங்கத்தால் அமைத்த "கார்வே கமிட்டி" சிறு தொழிலின் முன்னேற்றத்திற்கு 260 கோடி ரூபாய் செலவு செய்ய சிபார்சு செய்தது. பருத்தி நெய்தல், பட்டு நெய்தல், கம்பளி நெய்தல், கதர் கை குத்தலரிசி, தோல், நெருப்புக்குச்சி செய்தல்முதலியவைகளுக்கு முதன்மை இடம் அளிக்க அந்தத் தொகையை சிபாரிசு செய்தது "கார்வே" கமிட்டி.

இரண்டாவது திட்டத்திலே "சிறு தொழில்" பிரி

தென் அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் பண்ணிவரும் இளவரசி அலெக்சாண்ட்ரா.

விலே வேலையின்மையை அகற்றி, அதிகப்படி நபர்களுக்கு வேலையளிக்கவும், படிப்படியான பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகாட்டியது கார்வே கமிட்டி. வீண் செலவுகளை தடுக்கவும், தகுந்த உற்பத்தி, விநியோகம் இவற்றை கவனிக்க ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்

இங்கிலாந்து அரசியான எலிஜபெத்தின் தாயார் நைரோபியில் நடந்த வரவேற்பு விருந்தில் கலந்து கொண்டார்.

படுத்தவும் கார்வே கமிட்டி சிபாரிசு செய்தது. "சிறு தொழில் ஆராய்ச்சி நிலையங்கள்" நம் சென்னையிலே காண் இருக்கும்

இதைத்தவிர 'சிறுதொழில்' சிறப்பினை மக்கள் "கண்காட்சிகள்" மூலமாகவும்

ங்கு இன்றைய இந்தியா விலே அறிந்துள்ளனர். இரண்டாவது திட்டத்தில் குடிசைத் தொழில் சிறு தொழிலுக்கென 127 கோடி ரூபாய்ஒதுக்கப்பட்டது. சென்னை அரசாங்கம் சிறு தொழிலுக்காக "தொழில் எஸ்டேட்டுகள்" நிறுவியுள்ளது.

"சிறுதொழிலின் முழுமையான உற்பத்தி ஏற்படுத்த விமோசனம், மின்சாரத்தை பயன்படுத்துவதிலுள்ளது. திட்டகமிஷன் ஆலோசகர் ராமமூர்த்தி அவர்கள் கூறியதையும் கவனித்தல் அவசியம்.

சிறுதொழிலுக்கு முதலிடம் கொடுத்த கார்வே கமிட்டி மில் தொழிலுக்கு ஏற்ற இடம் அளிக்காதது பெரும் விபத்தில் முடியுமென இந்திய வர்த்தக சங்கம் தன் விருப்பத்தை அப்பொழுது தெரிவித்தது. மில் தொழிலுக்கு சரியான இடம் அளிக்காவிடில் மில் துணிகளின் விலை ஏறி மக்கள் அவதியுற நேரிடும் என அச்சங்கம் வலியுறுத்தியது.

ஆகவே இவை அனைத்தையும் ஒருங்கே கண்ணுற்று சிறுதொழிலின் சிறப்பால் மற்ற தொழில்களின் சிறப்பும் சீர்கேடு அடையாமல் தவிர்த்து, சிறு தொழிலின் சிறப்பின் வெற்றிக்கும் வேண்டிய அளவு வசதி அளிப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

"சிறுதொழில்" நம் பாமர மக்களின் வாழ்க்கைக்கு பெரிதும் உதவுகிறது. பொருளாதார நிலைமை உயர பாமர மக்களின் நிலைமை உயரவேண்டும். பாமர மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவே அவர்கள் பின்பற்றும் தொழில், வளம் பெறுதல் அவசியம். சிறுதொழில் குடிசை தொழில் இரண்டும் ஏழ்மையை அகற்றும் இரண்டு சக்திகள்.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் வெற்றியுடன் முடிந்து மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலே மேன்மேலும் "சிறுதொழில்" சிறப்படைய பாரத சர்க்கார் தீவிரமாக சிந்திக்கும் என்பதில் ஐயமில்லை.

●

Sree Jayalakshmi & Co.,

MAKERS OF CANE FURNITURE

14, ராயப்பேட்டை ஐரோடு, : : மைலாப்பூர், சென்னை-4.

எந்த விதமான உபயோகத்துக்கானாலும் சரி, எப்படிப்பட்ட புது டிசைன்களாக இருந்தாலும் சரி; அவைகளை உறுதியான நல்ல பிரம்புகளைக்கொண்டு, நீடித்த உழைப்பு தரும்படி தயார் செய்து, அழகான கண்ணைக் கவரும் பல நிற இனாமல் வர்ணங்களினால் அலங்கரித்து குறித்த நேரத்தில் டெலிவரி செய்கிறோம்.

வெளியூர் ஆர்டர்கள் அடிக்கடி கவனிக்கப்பட்டு நேரம் தவருமல் புக் செய்யப்படும்.

ரயில் பிரயாணத்தில் சாமான்கள் சேதம் அடையாமல் இருக்க உத்திரவாதத்துடன் பேகிங் செய்கிறோம்.

உள்ளூர் நபர்கள் ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்யக் கோருகிறோம்.

மற்ற விபரங்களுக்கு இன்றே எழுதவும்.

உரிமையாளர்,

K. N. ராஜன்.

நளினி

"மாமல்லன்"

சண்முகம் கொஞ்சம் பசையுள்ளவன்; பொதுநலவாதியும் கூட. அவன் மனைவி ருக்மணி ஒரு ஆண் மகவை ஈன்றதிலிருந்து அவள் நோய் வாய்ப்பட்டு நலிந்து படுத்த படுக்கையாகி விட்டாள். சண்முகம் அவளைத் தேற்ற படாதபாடுபடுகிறான். வைத்தியர்களும் தீராதென கைவிட்டு விட்டனர். சண்முகம் மனம் தளர்ந்து வீட்டை விட்டு வெளியேறி நீலகிரி சென்று ஒரு ஓட்டலில் தங்கி விடுகிறான் மனம் நிம்மதியற்று, ஆறுதலுக்காக மதுபானம் அருந்தி விட்டு ஜாகைக்குத் திரும்பும்போது மயக்கமடைந்து சாலையில் விழுந்து விடுகிறான். அவ்வழியேச் சென்ற நளினி என்கிற இளம் விதவை அவன் மீது பரிதாபப் பட்டு, வண்டியிலேற்றி தன் பங்களாவுக்கு அழைத்துச் செல்கிறாள். மயக்கம் தெளிந்த சண்முகம், பக்கத்தில் சோபாவில் உட்கார்ந்துக் கொண்டிருந்த நளினியைக் காண்கிறான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவளின் எழிலுருவைக்கண்டு மயங்கி உற்று நோக்குகிறான்! அவளும் ஓர் இளம் விதவைதானே! கேட்பானேன். கண்ணோடு கண் நோக்கினால் என்னாகும்? சண்முகம் (புன் சிரிப்புடன்) தாங்கள்.!

நளினி : மங்கை...இல்லை இல்லை—பெண்.

சண் : யாரில்லை யென்றதுங்க...

நளி: ஆமாம்...தாங்கள்...

சீர்திருத்தத்தின் பேரால் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வோர் பலர் நீறுபூத்த நெருப்பாய் வாழ்ந்து வருகின்றனர். கால ஒற்றுமை அவர்களுக்குக் கவசமாய்த் தோன்றினும் என்றோ ஓர் நாள் உண்மை வெளிப்பட்டே தீரும். இந்த அடிப்படையில் அமைந்துள்ளது 'மாமல்லனின்' ''நளினி''

சண்: நான் பட்டணவாசி, சண்முகம்...அது சரி உங்கப் பேரைச் சொல்லலியே...

நளி: ம்ம்...நளினி...நான் ஒரு விதவை.

சண்: ஐயோ பாவம். உங்களைப் பார்த்தால் பால்மனம் மாருத பச்சிளங் குழந்தை போல... தாங்கள் விதவைவா?

நளி: எல்லாம் விதியின் விளையாட்டு... யாரென்ன செய்ய முடியும்.

சண்: ஏன் முடியாது... ஆண் மகன் முன் வந்தால்... பெண் இனம் விதியின் விளையாட்டிலிருந்து தப்பமுடியும். தலையெழுத்தாம்...தலையெழுத்து.

நளி: ஆமாம்...எல்லாம் வாய் பேச்சு வீரர்கள் தாம்...செய்கையில்.

சண்: எல்லோரும் அப்படியிருப்பார்களென்று எதிர்பார்ப்பது தவறு. அம்மாதிரியானவன் நானல்ல. செய்கையில் செய்தே காட்டுவேன்... ம்...சரி யென்று சொல் பார்க்கலாம்.

சில நாட்கள் செல்கின்றன.

ருக்மணியின் கணவன் சண்முகம் விதவை நளினியின் பேரில் காதல்கொண்டு அவளைப் பதிவுத் திருமணம் செய்துகொள்கிருன். நளினிக்கு தனக்கு ஒரு மூத்தாள் (கணவனின் முதல் மனைவி) இருப்பது தெரியாது. இரண்டு திங்கள் கழிகிறது.

இடம்: நீலகிரியில் நளினியின் பங்காளா.

சண்முகமும் நளினியும்.

நளினி:—ட்ரெஸ் மேஜையிலுள்ள கண்ணுடியில் தன் சுந்தர வடிவைப்பார்த்துக் கொண்டே "வடிவழகிலே என்னைப்போல்யாருமில்லே". என்று பாடுகிருள். அங்கு வந்த சண்முகம் பேஷ் பேஷ் என்று கைத்தட்டுகிருன்.

நளினி: என்னங்கோ நான் பாடினுல் உங்களுக்கு பரிகாசமா...அத்தான்?

சண்முகம்:—ஆமாம், யார் இல்லே என்றது? பாட்டுக் கச்சேரி நடக்கும் இடத்தில் கேலி, கூத்து, கைத்தட்டல் எல்லாம் நடக்கும். இது கணவன் மனைவியரிடையேயும் நடக்கக் கூடாதா. நளினி.!

நளினி: நான் உங்கள் அடிமையாகி...

சண்முகம்: இன்றோடு இரண்டு திங்கள் ஆரம்பமாகிறது.

நளினி: என்ன அத்தான்.

சண்முகம்: என்ன இது புதிர்.

நளினி: புதிரா. சரிதான். பரிசைக்கேட்டேன்.

சண்முகம்: அதுவா அப்போதே தயாராகி விட்டதே. நீயேன் கேட்கவில்லை. மறந்தே போய் விட்டேன்.

நளினி: கொடுக்கலாம்னு இருந்தீங்க. பெண்களே சுயமரியாதை அற்றவர்கள். அப்படித்தானே அத்தான்.

சண்முகம்: ஆமாம். ஆனல் எல்லோரும் இப்போதெல்லாம்...சுயமரியாதை யுள்ளவர்களாக மாறி இருக்கிருர்கள்.

இதோ நளினி கொண்டு வருகிறேன். உன் பரிசை.

(சண்முகம் போகிருன். நளினி மேஜையை ஆராய்கிருள். ருக்மணியின் கடிதம் கிடைக்கிறது. அதனைப் படிக்கிருள்)

நளினி: (படிக்கிருள்) 'என் ஆசை அத்தானுக்கு.

நம் வாழ்வு பூத்து மலர்ந்திருக்கும், ரோஜா மலராய் பரிணமித்தது. திடீரென்று என் வாழ்வை கசக்கி எறிந்து விட்டீர்கள் அத்தான்... என்னை மறந்தாலும் நீங்கள் என்மேல் வைத்திருந்த அன்பின் சின்னமாய் பிறந்திருக்கும் மகவுக்கு இன்றோடு ஒரு வருடம் பூர்த்தியாகிறது.! அவனை நீங்கள் மறக்கமுடியுமா அத்தான்? நீங்களவனை மறக்க முடியாது! எனக்காக இல்லாவிட்டாலும் உங்கள் செல்வத்துக் காகவாவது வாருங்கள் அத்தான். கணவனிருந்தும் நான் ஓர் அநாதையாக வாழ்கிறேன்! தகப்பன் இருந்தும் அப்பா என்றுக் கூப்பிடவழியில்லாமல் வாழ்கிருன் உங்கள் மகன்!

"தங்கள் மனைவி".

"நளினியின் முகம் வேதனையாலும், கோபத்தாலும் மாறுகிறது. கண்ணீர் ஆருகப் பெருகுகிறது. அப்போது சண்முகம் கையில் ஒரு நகைப்பெட்டியுடன் வருகிருன்."

P. ஹாசேன்ஷா & சன்ஸ்

P. H. முகமது

நஸீருத்தீன்

டால்மியா சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்
G I பைப் & பைப்
பிட்டிங்ஸ் வியாபாரம்,
இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்

பாலக்கரை ரோடு திருச்சி-8.
தபால் பெட்டி நெ. 456
போன் : 786

தந்தி : HARDWARE

சண்முகம்: நளினி. இதோ பார் உன் பரிசு...வைரமாலை.

நளினி: உங்கள் இருதயம் வைரத்தை விட இருகலானது. தாலி கட்டிய மனைவி கண்ணீர் விட்டு அழுகிருள். கெஞ்சுகிருள், நீங்கள் கொஞ்சுகிறீர்கள் இங்கே. விதவையை வாழ்வித்தேன் என்று விதண்டா வாதம் வேறே செய்கிறீர்கள்.

சண்முகம்: நளினி....ம். என்ன?

நளினி: நான் பேசவில்லை. கடிதம் பேசுகிறது. நீங்களே கேளுங்கள்!

(கடிதத்தை வாங்கிப் படிக்கிருன். முகம் சுருங்குகிறது)

சண்முகம்: ம்...ஏது இந்தக் கடிதம்

நளினி: அடாத காரியம் செய்தவன் என்றும் அதனை மறைக்க முடியாது! சந்தர்ப்பம் வெளிப்படுத்தி விட்டது உம் சதியை.

சண்முகம்: நளினி நீயுமா?

நளினி: பெண்களென்ன... ரோஜா மலர்களா? உமதிஷ்டப்படி இல்லாவிடில் பெண்களின் உள்ளத்தை காய்ந்த சருகுகளாக நினைக்கிறீர்கள். சதியே உருவானவர் நீங்கள். அத்தான் பெண்கள் தூய்மை மனம் படைத்தவர்கள். அதனைப் பிய்த்தெறிய அடாத சதிகள் செய்தாலும், அன்பெனும் சக்தியால் அதனை தகர்த்து எறிவார்கள் இதோ பாருங்கள், உங்கள் மனைவியின் கடிதமே சொல்லும்.

சண்முகம்: அவள் நோயாளி. காசநோய் கண்டவள்.

நளினி: நோயே பிடிக்காதவர் யார் அத்தான்? சொல்

லுங்கள்? சொல் லு ங் க ள்? சொல்லுங்கள் பார்ப்போம்?

சண்முகம்: அவள் என்னை வஞ்சித்து விட்டாள், அவ ளழகைக்காட்டி சா க ஸ ம் செ ய் து என்னை உன்மத்த னாக்கி விட்டாள்...நளி னி என் அன்பே.

நளினி: நீங்களும் என்னை வஞ்சித்து வி ட் டீ ர் க ள் இல்லையா சாகஸம் செய்தீர், மதிமயங்கிவிட்டேன்!

சண்முகம்: நடந்தது போகட்டும் நளினி இனி....

நளினி: அத்தான் நடந் ததை மறைத்து விடலாம். ஆனால் உங்கள் ருக்மணி யைநீங்கள் மறக்க முடியாது. அக்காள் ஒரு ஜீவன்: என் போல் உணர்ச்சியுள்ளவள். அன்பை அமுதம் போல் பொழிகிறீர்கள் என் மீ து. அது என் அக்காளைச் சேர வேண்டியது அ த் தா ன்! அதனை நான்ஏற்றுக்கொண் டேன்? பூவே பூங் கொடியே, முத்தே என் ரதியே பொன் னே, புவியே,என்ரோஜாவே, தேனமுதே என்றெல் லா ம் காதல் கீ த ம் பாடினீர்கள்! அதுகேட்டு ம ய ங் கி மாரி கண்ட மயிலானேன் நா ன். அத்தான்! இப்போது தான் தெரிகிறது நான்வான்கோழி என்று. மயில் வேறு இருக் கிறதென்றும் உணர்கிறேன். அந்த மயில் காலொடிந்து சிறகிழந்து, வாடி வதங்குகி றது! அத்தான் அ ங் கே... அங்கே போங்கள்! அவளை வாழச் செய்யுங்கள். அத் தான்—உங்களை கெஞ்சு கிறேன்.

சண்முகம்: என் உள்ளத் தைக் கொள்ளை கொண்ட வள் நீதான். நளினி. என் கண்ணே.

நளினி: அவள் நானல்ல வே. உம்மீது உள்ள பாசத் தை அப்போதே பிய்த்தெறி ந்து விட்டேன். நான் யாரோ. நீங்கள் யாரோ.

சண்முகம்: அப்படியா... ம். நீ என் ரோஜாமலரல்ல வா?

நளினி: நான் உயிரோடு உள்ள வரைக்கும் நான் உங்கள் மனைவியாகத்தான் இருப்பேன். ஆனால் சேர்ந்து அல்ல. உடலும் உள்ளமும் உறவாடியல்ல,உலகுக்கு ஒரு எடுத்துக்காட்டாய் விளங்கு வேன். நான் ஒரு கசங்கிய மலர். அதுவும் இரண்டாவ தாக.

சண்முகம்: அடடா. அப் படியா. அருகில்வா பார்ப்

2/21, பிள்ளையார் கோயில் தெரு,

சென்னை-3

போம் (அவளை கட்டி அணைக்க செல்கிறான்).

நளினி: நில்லுங்கள் எட்டி. என்னைத் தொடாதீர்கள். நம் உறவு துண்டித்து விட்டது! வானத்திலிருந்து ஒரு நட்சத்திரம் விழுந்து விட்டது. என்னை அணைக்கவரும் கைகளால் என் அக்காளை அணைத்து ஆறுதல் சொல்லுங்கள். சோகத்தால் வாடியிருக்கும் அவள் முகம் உங்கள் முகத்தைக் கண்டால், சூரியனைக் கண்ட தாமரையாகும்! என் கண்களிலே காந்தத்தைக் கண்ட உங்கள் கண்கள், அவள் கண்களிலே கண்ணீரைக் கண்டால் கலங்கும்! உங்கள் மனம் மாறும், நோயாளிகளுக்கு அன்பு தான் மூல மருந்து! போங்கள் அத்தான் போங்கள். போய் அவள் வாட்டத்தைப் போக்குங்கள்! மகிழ்ச்சியடைவாள் உங்களைக்கண்டவுடன்.

சண்முகம்: என் அன்பு உனக்குத்தான் சொந்தம்.

நளினி: உங்கள் அன்பு ஒரு அபலையின் வாழ்வின் மேல் எழுப்பப்பட்ட கல்லறை! அதிலே தூய்மை கிடையாது. வெறிதான் நிரம்பியிருக்கிறது. காதலனின் அன்பல்ல அது, கயவனின் காமம், ஸ்திரி லோலனின் சாகஸம்.!

சண்முகம்: கரும்பே! என்னால் உன்னைப்பிரிந்து வாழ முடியாது. அங்கே போக முடியாது. சகலபோகமும், சொர்க்கமும் நீ தான் எனக்கு. உலகமே நீ தான் கண்ணே.

நளினி: அண்டசராசரங்களின் அற்புதங்களிலே இதுவும் ஒன்றா? அத்தான்.

உங்கள் அறிவை யிழந்து விட்டீர்களா? ம். நான் போகி றேன் உங்களை விட்டே. என் போன்ற ஒரு பெண்ணை வாழ வைக்க!

(நளினி பங்களாவை விட்டு வெளியேறுகிருள்)

[ச]ண்முகம்: கண்ணே நளினி! நளினி போகாதே வா......

(அவளைப் பின் தொடருகிருன்)

நளினி: (திரும்பி) அத்தான், நம் தொடர்பு துண்டிக்கத்தான் வேண்டும். என்னை மறந்து விடுங்கள். என் அக்காளோடு வாழுங்கள்! நான் உங்களை வெறுக்கி றேன் என்று நினைக்கவேண்டாம். நான் எங்கிருந்தாலும் இதயத்தில் உங்கள் பிம்பம் என்றும் எழிலோவியமாக நான் வணங்கும் தெய்வமாக நிலைத்திருக்கும்! விதவையை வாழவைக்க நினைத்திர்கள்! அதற்காக விஷப் பரீட்சை யில் இறங்கி விட்டீர்கள்! இனியும் இந்தத் தவறைச் செய்யாதீர்கள். அத்தான்! இது மன்னிக்கவும், மறக்கவும் முடியாதத் தவறு. நான் போகிறேன்.

(சண்முகம் என்னசெய்வ தென்று அறியாது திகைத்து நிற்கிருன், நளினி போய் விடுகிருள்)

(திரை)

ஐந்தே நாளில் உருவாகிய சினிமா படம்

எட்வர்ட் என்கிற ஆலிவுட் சினிமா டைரக்டர் ஐந்தே நாளில் ஒரு முழு சினிமா படம் தயாரித்துள்ளார். அப்படத்தில் பெயர் "தி ஹாக்" அதற்காகவேண்டி சுமார் 25 லட்சம் ரூபாய் செலவாகியுள்ளதாம். இப்படம் தயாரித்து 20 வருடங்கள் ஆகியும், இன்னும் இப்படம் திரையிடப்பட்டு வருகிறதாம்.

தொழில்

மாதமிருமுறை

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

நியூயார்க்கைச் சேர்ந்த சிறு வாத்திய கோஷ்டியாருக்கு உட்லாண்ட்ஸ் ஓட்டலில் சென்னை மியூஸிக் அகாடமி வரவேற்பளித்தது. வாத்திய கோஷ்டித் தலைவர் (டைரக்டர்) தாமஸ் ஷெர்மானேடு ஸ்ரீமதி எம். எல். வசந்தகுமாரியும், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியும் காணப்படுகின்றனர்.

ஆயுத போலீஸ் கதை

—[இந்திய காவலர்]—

(முன் தொடர்ச்சி)

நமது படை ஹைதராபாத் போய் சேர்வதற்கு முன் அங்கு உள்ள நிலை மிகவும் கவலைக்கிடமானதாயிற்று. அங்கே அமைதி நிலவவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்களின் அட்டகாசம் அடங்கவில்லை. இரத்த வெறிகொண்ட இந்த ராட்சச கும்பல் தினம் கொலையும், கொள்ளையும் நடத்தினார்கள். ஏன் இந்த வெறியாட்டம் என்று கேட்பாருமில்லை. அங்கு கேட்டவர்களை கேவலமாக நடத்தி, ஆவி துடிக்கத் துடிக்க அங்கஹீனம் பண்ணி அறுத்தெறிவார்கள் இந்த அரக்கர்கள் கசாப்புக்காரன் ஆட்டுக் கடாவை அறுப்பதைப் போல.

இத்தகைய சம்பவங்களை ஒன்று விடாது எடுத்துக் காட்டினார் "இம்ரோஸ்" என்ற தனது பத்திரிகையிலே தனிப்பெரு வீரன் ஷோபுல்லாகான். தன்னினம் பாரா தனிப்பெருந் தலைவன்; தனது வகுப்பார் செய்யும் அட்டூழியங்களை கண்கொண்டு பார்க்க முடியவில்லை அவரால். எச்சரித்தும் பயனில்லை. எடுத்தார்கள் வாளை இறுதி ரத்தம் குடிக்க இந்த அரக்கர்கள். உயிரைப்பெரிதெனக் கருதா அந்த உத்தம வீரன் எடுத்துக்காட்டினார் உலக மக்களுக்கு இவர்கள் நடத்தும் அக்ரமம் ஆர்ப்பாட்டங்களை.

அறிந்தான் அக்ரமவீரன், அரக்கர்களின் தலைவன் ரஜ்வி. இனத்திற்கு தீங்கு செய்யும் எமபாதகா ஏன் இந்த அறிவீனம் உனக்கு? நமது வகுப்பார் முன்னேற நான் நடத்தும் தொழில் நல்லது. சேர் என்னுடன் இல்லாவிட்டால், இந்த வாள் ருசிபார்க்கும் உனது இரத்தத்தை என சீறினான்.

ஏ! இரத்த வெறி கொண்ட இராட்சசனே! ஏன் வெறியாட்டம் உனக்கு? நமது வருப்பார் 'முன்னேற' நீ நடத்தும் ராசகாரச் செயல்

நல்லது. நான் கொடுக்கும் அறிவுரை கெட்டது. அப்படித்தானே. நீ அக்ரமத்தின் அழிவுச்சிகரம். இதோ வருகிறது முடிவு உனக்கும் உன் கூட்டத்தாருக்கும் வெகு சீக்கிரம், எனக்கூறி மீண்டும் அவர்களின் அன்ருட அட்டூழியங்களைவிடாது பத்திரிகையில் எடுத்துக் காட்டி வந்தார் என்றும் போற்றப்படும் "இம்ரோஸ்" பத்திரிகை ஆசிரியர்.

அறிந்தான் அட்டூழியத்தின் அஸ்திவாரம். அரக்கர்களின் தலைவன் ரஜ்வி. நம் இனத்துக்கு ஓர் நாசகாலன் தோன்றினன். இவனைத் தொலைப்பதற்கு ஓர் முடிவு தேடவேண்டும் எனத் திட்டம் போட்டான் முட்டாள் குல மூர்க்கன்.

வழக்கம்போல் அவர்கள் நடத்தும் அட்டூழியங்களை அன்ருட பத்திரிகைக்கு எடுத்துச் செல்லும்போது, பழிவாங்க காத்திருந்த படுபாவி ரஜ்வி ஷோபுல்லாகானைச் சுட்டுத்தள்ளினன். தொலைந்தான் தொல்லை கொடுத்த இனத்துரோகி, இனிநாம் முன்னேறலாம் என கங்கணங் கட்டினன் ஜாதி வெறிகொண்டச் சண்டாளன். இனவெறிகொண்ட எமகாதகன். வேற்றுமை உள்ளங் கொண்ட வெறியன்.

அந்தோ மாண்டார் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரன் ஷோபுல்லாகான். ஹைதராபாத் மக்கள் புத்துயிர் பெற இந்த அக்ரமகாரர்கள் அழிய நான் ஆவி துறக்கிறேன். அமைதி நிலவும் ஹைதராபாத்தில் எனக் கூறி ஆவி துறந்தார் ஆண்மையின் வீரர்.

ஹைதராபாத்தில் நமது படையின் சேவை

நமது படை கொண்டு வரப்பட்டது ஹைதராபாத்துக்கு. மக்கள் படும் அவஸ்தையை தீர்க்க ஹைதராபாத்தில் அவர்கள் செய்தசேவை என்றும் மறத்தி:ற் இல்லை. மறக்கவும் முடியாது. அவர்கள் தாண்டாத காட்டாறு இடையாது. அவர்கள் அலையாத வனங்கள் இடையாது. அவர்கள் மிதியாத இடங்கள் இடையாது. காரிருள் வனங்கள் பார்க்க வேண்டுமானல் அதை ஹைதராபாத்தில் தான் பார்க்கலாம். உணவில்லாது ஊக்கத்தோடு உழைத்தவர் எத்

தனை பேர்? ஆவிதுறந்தவர்கள் எத்தனைபேர்? இரத்தம் சிந்தியவர் எத்தனை பேர்? தவிக்கிறது என்றால் தண்ணீர் கிடையாது குடிக்க. பசிக்கிறதென்றால் புசிக்க நேரம் கிடையாது. ஆனால் ஊக்கத்தைக் கைவிடாது உண்மையுடன் உழைத்தார்கள். யார் எடுத்துப் பேசாவிட்டாலும் ஹைதராபாத் மக்கள் எடுத்துப்பேசுவார்கள் நமது படையின் தியாகத்தைப்பற்றி. ஏன்? ஹைதராபாத் மக்கள் எடுத்துப்பேசாவிட்டாலும் அங்குள்ள காடுகள் கழறும் நாம் பட்ட கஷ்டத்தைப் பற்றி. அங்குள்ள வனங்கள் வர்ணிக்கும் நாம் ஆற்றிய அரும் பெரும் தியாகத்தைப் பற்றி. அங்குள்ள காட்டு விலங்குகள் கண்ணீர் விடும் நாம் சிந்திய ரத்தத்திற்கு.

வீட்டிலிருந்து கடிதங்கள் வரும் தாய்க்கு சுகமில்லை. தந்தைக்கு சுகமில்லை. தங்கைக்கு சுகமில்லை என. அக்கடிதங்கள் கிடைக்க அநேக நாட்கள் ஆகும் அவர்களுக்கு. வனங்களில் அலைந்து திரிபவர்களுக்கு எப்படிக் கிடைக்கும் அக்கடிதங்கள்? பிறகு தாய் இறந்துவிட்டாள். உடனே புறப்பட்டு வா என தந்திவரும். அதுவும் கிடைக்க வழியில்லை. பிறகு, தாயின் கருமாதிக்காவது வந்து சேர் எனக்கடிதம் வரும். இவ்வளவு நாட்களுக்குப்பிறகு இக்கடிதமாவது அவர்களுக்குக் கிட்டும். அருமை பெற்றோர்களிடம் இருந்து வரும் கடிதங்களை அதுவும் அநேக நாட்களுக்குப்பின் மிக ஆவலுடன் படிப்பார்கள்.

உடனே மகன் பதறுவான், கதறுவான். உயிருடன் இருந்த தாய்க்கு கருமாதியா? எப்படி என ஏங்குவான். தாயின் சுகவீனக்கடிதங்கள் கிடைக்கவில்லை. இதுதான் கிடைத்தது எனத் திடங்கொள்வான். என்றாலும் பரவாயில்லை. என் தாய் நோயுற்றிருந்த நாள் இங்கே எத்தனை தாய்மார்கள் சித்ரவதைப்பட்டு இறந்தார்கள். இங்கே என் உண்மையின் சேவையைக்காட்டுவதே என் முழு நோக்கம். இவ்வளவு கஷ்டத்தையும் பாராது உழைத்தது நாம் என்றும் போற்றப்படும் நமது வீரப்படை.

ஜமேதார் சீதாபதியின் பிராணத்தியாகம்

இதோ நாம் அறிந்த தியாகி ஜமேதார் சீதாபதி

அவர்களை உங்களுக்கு இதோ நினைவூட்ட விரும்புகிறேன். அவர் எத்தகைய தியாகம் செய்தார்? எந்த நோயுற்று இறந்தார்? எத்தகைய சிகிச்சை பெற்று இறந்தார். நாம் சின்னாட்களுக்கு முன் பத்திரிகையில் படித்தோம். மாஸ்கோவின் தலைவன் மாவீரன் ஸ்டாலின் மாண்டான். அவன் மரண அவஸ்தையில் இருக்கும்போது அவனைச் சுற்றி ஒன்பது டாக்டர்கள். சுற்றிச் சுற்றி கவனித்தார்களாம். நிமிடத்திற்கு பல ஊசிகள் போடப்பட்டனவாம். அவன் உடல் நலத்தைக்காண முடிந்ததா? அவன் உயிரைக் காக்க முடிந்ததா? அத்தகைய சிகிச்சை பெற்று இறந்தவர் நம் அரும் பெருந்தியாகி ஆவிதுறந்த ஜமேதார் சீதாபதி.

அனுதிக் காட்டிலே காரிருள் வனங்களிலே கயவர்களைத்தேடி அலையும்போது அதே கயவர்களின் துப்பாக்கி குண்டுக்கு இரையானார். கயவர்களின் துப்பாக்கிக் குண்டுகள் வீரனின் மார்பை பிளந்தன. வீர ரத்தம் பிறிட்டு ஓடுகிறது வீரன் மார்பில் இருந்து. கதி கதிகலங்கினாரா? இல்லை நெஞ்சம் பதறினாரா? இல்லை. புறமுதுகுக் காட்டி ஓடினாரா? இல்லை. ஒருதுளி ரத்தம் உள்ளவரையிலும் கடைசி வரையில் போராடி அதே இடத்தில் உயிர் நீத்த அந்த உத்தமதியாகியை உங்கள் முன் நினைவுறுத்தவிரும்புகிறேன். தமிழனின் வீரப்பரம்பரையின் வம்ச வழியை சரிவர நிரூபித்த அந்த லட்சிய புருடனை தாங்கள் முன் நினைவுருத்த விரும்புகிறேன்.

தனயன் பிரிவும், தாயின் துயரமும்

அந்தோ மாண்டார் ஆண்மையின் வீரர். சோழநாட்டின் செம்மல் அனுதிக்காட்டிலே. தனயன் மாண்ட செய்திதாய்க்கு எட்டிற்று. தாய் தாங்கொணாத துயரத்துக்காளானாள். நேற்றுத் தன் மகனிடம் இருந்து கடிதம் வந்தது அவனின் பூரண சுகத்தைப்பற்றி.

மகனின் மங்கள வாழ்வை மகிழ்வுடன் எதிர்நோக்கிய தாய், மகன் மாண்டான் என்ற செய்தி கேட்டு மனம் கலங்கினாள்.

நீ சீக்கிரம் ஊர்வந்து சேர். உனக்குத் தகுதியுள்ள



சென்னை வந்துள்ள நியூயார்க் நகர 'லிட்டில் ஆர்ச்செஸ்ட்ரா' வாத்தியக் குழுவினர் ஒத்திகை பார்க்கும்போது எடுத்த படம். மத்தியில் நிற்பவர் குழுவின் தலைவர் தாமஸ் ஷெர்மான். தபலா தரங் வாசிக்கும் ஸ்ரீ என். வி. மூர்த்தி, ஜலதரங்கம் வாசிக்கும் இ. எம். ராமகிருஷ்ணன் ஆகிய இருவரையும் படத்தில் பார்க்கலாம்.

மணப்பெண் ஒன்று தேடி வைத்திருக்கிறேன். உன் முக மலர்ந்த புதுவாழ்வைக்காண வேண்டும். வாமகனே வா எனக்கடிதம் விடுத்தாள். மகனும் பதில் கடிதம் விடுத்தான். அம்மா! எந்த நோக்கத்திற்காக நான் கொண்டு வரப்பட்டேனோ, அந்த நோக்கம் இன்னும் பூர்த்தியாகவில்லை. அக்ரமக் காரர்களின் அட்டகாசம் அடங்கவில்லை. இங்கு இன்னும் அமைதி நிலவவில்லை, மக்கள் படும்பாடு மறைந்து நிற்கும் கடவுளுக்கும் பொறுக்கவில்லை. இதோ அமைதி நிலவிக்கொண்டு வருகிறது. இன்னும் சிறிது நாள் மட்டும் பொறுத்திருங்கள். நீங்கள் எதிர்பார்க்கும் புதுவாழ்வைக் கூடிய சிக்கிரம் நடத்தவருகிறேன். என தாய்க்கு அன்பு கடிதம்

விடுத்தார் அறப்போர் வீரர். இச்செய்தியுள்ள கடிதம் கிடைக்கப்பெற்ற தாய் மறு நாள் மகன் மாண்டான் என்ற செய்தியும்எதிர்பார்த்தாளா?

மகன் மாண்ட செய்தி கேட்டுமறுவுற்றதாய் அலறி அடித்து ஓடி வருகிருள் ஹைதராபாத்துக்கு. மக்கள் படை சூழ மாவீரன் பிரேதம் எடுத்துச் செல்லப்படுகிறது ஹைதராபாத் வீதிகளிலே. போலீஸ் படை சூழ போர் வீரன் பிரேதம் எடுத்து செல்லப்படுகிறது. தாய் இக் கோரக்காட்சியை தூரத்தில் நின்று பார்க்கிருள் மகனின் மாண்ட நிலையை. மனங் கலங்கி பார்க்கிருள். தாயின் தவிப்பைக்கண்ட போலீஸ் அதிகாரிகள் தாயைத் தேற்றுகிருர்கள். அம்மாவின் அலறலைக்கேட்ட அம்மேலதிகாரிகள் அம்மாவிற்கு ஆறுதல் கூறுகிருர்கள்.

மகனின் மௌன நிலை கண்டதாய் மண்டலங்கலங்க ஆங்கார சிரிப்பு சிரித்தாள். ஓ! போலீஸ் அதிகாரி அவர்களே! நீங்கள் எனக்கு பொய் தந்தி கொடுத்தீர்கள் என் மகன் மாண்டான் என்று: என் மகன் சாகவில்லை. அவன் நாட்டிற்கு செய்ய வேண்டிய கடைசி சேவையை முடித்துவிட்டு ஆழ்ந்த நித்திரையில் இருக்கிருன். அமைதியோடு உறங்குகிருன். அவன் பிறருடனும் பேசான். பெற்ற தாயாகிய என்னுடனும் பேசான். அவனை யாரும் எழுப்பவேண்டாம். அவன் செல்ல வேண்டிய இடத்திற்கு சென்று விட்டான். அவன் சாகவில்லை. ஆனல் நீங்கள் கொடுத்தது பொய் தந்தி எனக் கூறி துப்பாக்கிக் குண்டுகளால் துளைத்த மகனின் பிரேதத்தைக் கட்டி அலறினள். முட்டினள், மோதினள் அப்போர் வீரனைப் பெற்ற தாய். இத்தகையதோர் தியாகம் செய்தது என்றும் போற்றப்படும் நமது வீரப்படை.

படையின் எதிரொலி

ஹைதராபாத்தில் அமைதி நிலவிற்று. புண்பட்ட மக்கள் புத்துயிர் பெற்றுர்கள். நமது படையின் பிராணத் தியாகத்தால் வேதனையில் தவித்த மக்கள் வீறு பெற்ருர்கள்.

பிராணத்தியாகத்தால் நமது படையின் அரும்பெரும் சேவையால். அமைதி நிலவியது.

இத்தகைய தியாகம் செய்த படைக்கு எதிரொலி கிட்டினது. நமது படை சிதறடிக்கப்பட்டது ஆட்குறைப்பு என்ற சட்டத்தின் தடியால். என்றாலும் நமது காருண்ய சர்க்கார் கருணை காட்டிற்று நமது படையின் பாராட்டிற்குரிய சேவைக்கு.

வேலை நீக்கத்தின் அத்தாட்சி பத்திரம் கொடுக்கப்பட்டது நமது படையின் ஒரு சில பகுதிக்கு. அதில், தற்போது உன் சேவைபோதும். அரசாங்கம் விரும்பினால் மீண்டும் அழைக்கப்படலாம் என்ற உத்தரவு.

போலீஸ் படை, அப்படையில் சேர்ந்து சேவை செய்ய எனக்கு வாய்ப்புகிட்டாவிட்டாலும் அது செய்த சேவை, அது சிந்திய ரத்தம், அது விட்ட ஜீவன் இவைகளைப் பற்றி கண்டவைகளையும், கேட்டவைகளையும் ஒருமித்து என்படை வீரர்களின் பாற்கொண்ட பேரன்பால் இக்கட்டுரையை சமர்ப்பிக்கிறேன்.

வணக்கம்

இப்படிக்கு,

"துப்பாக்கி"

Maniyam Industrial & Engineering Works

Government Approved Fabricator & Contractor,

(Regd. No. 5.)

A.C.C. CEMENTSTOCKIST

2, Sankari Road,

Trichengode,
(Salem Dt.)

(சென்னை அரசினர் உதவிபெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப்பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக் கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

துணைவி

"க. கங்காதரன்"

மெல்ல வீசிய இளந்தென்றல் ஜன்னலினுட் பாய்ந்து உள்ளே மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த காகிதங்களை அங்கும், இங்கும் பறக்க விட்டது. இவ்வளவு நேரம் எதையோ மும்முரமாக படித்துக்கொண்டிருந்த சேகர், விருட்டென்று தனது இருக்கையிலிருந்து எழுந்துதாவிப் போய், அவைகளை ஒன்று சேர்த்து அடுக்கி டிராயரில் வைக்க எண்ணி டிராயரை இழுத்தான். டிராயரினுள் ஒரு புதிய கவரொன்று கிடந்தது. எடுத்து மேலே பார்த்தான். கண்ணம்மா செங்கற்பட்டு என்ற இடத்திலிருந்து வந்திருந்தது. மேலே இருந்த ஸ்டாம்ப் அது காலை 10 மணிக்கு டெலிவரியாகி இருந்தது என்பதைக் காட்டியது. அவசர அவசரமாக பிரித்து அதில் காணப்பட்டதைப் படித்தான், படிக்கும்போதே முகம் களையிழந்தது. அதைப்பழையபடியே கவரில் திணித்து டிராயரை இழுத்து சாத்தினான். கையிலிருந்து புத்தகத்தை மூடிவிட்டு, லைட்டை அணைத்துவிட்டு படுக்கையில் சாய்ந்தான்.

சேகர் ஒரு, பி. ஏ., பட்டதாரி. சிறுவயதிலேயே தந்தையை இழந்து, தாயின் உழைப்பால் ஒருவகையாக தனது கல்லூரிப்படிப்பை முடித்துக்கொண்டான். வேலைத் தேடுவதற்காக சென்னையெல்லாம் அலைந்து கடைசியில் ஒரு நண்பனின் சிபாரிசு மூலம் பெங்களூரில் உள்ள சிவலிங்க முதலியார் என்பாருக்குச் சொந்தமான அலுவலகத்தில் சிறியவேலையொன்றைப் பெற்றான். அவனது நற்குணத்தைக் கண்ட முதலியாரே தனக்கு சொந்தமான ஒரு வீட்டில் குடியிருக்கச் செய்தார். வீட்டிற்கும் அலுவலகத்திற்கும்

கொஞ்ச தூரம்தான் இடை வெளி.

செங்கற்பட்டிலிருந்த அவனது தாய் கண்ணம்மாதான் அக்கடிதத்தைப் போட்டிருந்தாள். தனக்கு காய்ச்சல் என்றும், பணம் அனுப்பும் படியும் எழுதியிருந்தது. சேகருக்கு வேலை யொழி வில்லை: மேலும் கடிதத்தின் கீழே:

சேகர் எனக்கு உடல்நிலை மிகமிக மோசமாகிவிட்டது. எனக்கே நிலையில்லை. நீ இக்கடிதத்தைக் கண்ட வுடன் ஓடிவருவாய் என எண்ணுகிறேன். உனக்கு அதிக துன்பம் தர என் மனது இடங்கொடுக்கவில்லை! நீ உனது அன்புத்தாயைக் காண வருவாயாக......காத் திருப்பேன்.

மீண்டும், மீண்டும் தனது தாய் நேரே தோன்றி உரைப் பதுபோல் இருந்தது அவ னுக்கு. காலையில் போய் அழைத்து வரலாம் என்ரு லோ முடியாத காரியம், அவனது எஜமானரின் பெண் வனஜா சென்னையி லிருந்து அன்றுதான் பெங்க ளூருக்கு வருகிருள். அதற்கு முன்னிரவே முதலியார் கார் டிரைவருடன் கோயமுத்தூ ருக்கு அவசியமாக செல்வ தால், கார் ஓட்டத்தெரிந்த சேகரிடம் அவளை அழைத்து வர உத்திரவிட்டிருந்தார். கடிகாரம், மணி 11 அடித்து விட்டு மீண்டும் அதுதனது டிக்டிக்கென்ற ஒலியைத் தொடர்ந்தது. சேகருக்கு உறக்கம் வர மறுத்தது...... மெல்ல......மெல்ல....இமை கள் மூடின சிறிது நேரத் திற்குள்ளே.

வனஜா, முதலியாரின் ஒரே செல்வமகள். இந்த வருடம்தான், பி. ஏ., முடித்து கல்லூரியிலிருந்து திரும்பி வருகிருள். சென்னை யில் எவ்வளவோ உறவினர் வீடிருந்தும் வனஜா தனி யாக ஒரு ஓட்டலில் தான் அறையெடுத்துக்கொண்டு படித்து வந்தாள். அவளை அழைத்துவர சேகர் பத்து மணிக்குச் சென்று காத்துக் கொண்டிருக்கவேண்டும். அதன் பின்னர் அவளை அழைத்து வருவது அவ னது மறுநாளைய பொறுப்பு.

பொழுது மெல்ல புலர்ந் தது. மேகப்படலம் மெல்ல, மெல்ல மறைய ஆரம்பித் தது. பனித்துளிகள் கதி ரோனின் வரவை எதிர் நோக்கின. சேகர் படுக்கையை விட்டு எழுந்தான், எதிரே



இருந்த தனது தாயின் படத்தை நோக்கியபடியே. காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு, கொஞ்சம் பழைய கணக்குகளை சரி பார்த்து விட்டு உடையணிந்துக்கொண்டு, தனது பெட்டியில் இருந்த பணத்தை யெடுத்துக்கொண்டு காரை நேரே போஸ்ட் ஆபீசிற்கு செலுத்தினான்.

சேகர் வனஜர்வை நேரில் பார்க்காவிடினும்,போட்டோவில் பார்த்திருக்கின்றான். அந்த நம்பிக்கையிலும், தனது மகளுக்கு தனது காரின் எண் தெரியும் என்ற உறுதியாலும் தான் முதலியார்முன்னே கண்டறியாத சேகரை அவளை அழைத்து வர அனுப்பினார். ஏனோ...... அவருக்கு சேகரின் மேல் அளவற்ற ஓர் பிரியம்.

ஒவென்ற காட்டுக் கூச்சலுடன்ரெயில்வந்துநின்றது. சேகர் கொஞ்சம் பிளாட்பார ஓரமாக நடந்தான்.அப்பாப்ப எவ்வளவோ பெண்கள். யாரென்றே கண்டு பிடிக்க முடியவில்லை.

தோல்வியுடன் திரும்பினார் சேகர். அது சமயம்...... அவனது காரினருகே ஓர் கருப்புக் கண்ணாடி தரித்து, டம்பப்பையை கையில் ஏந்திய ஓர் அழகிய பெண் நடந்துச் சென்றாள். வேகமாக முன்னேறிய சேகர்......

தாங்கள்தான் மிஸ் வனஜா......வனஜா அவளை நோக்கியபடியே ஆமாம். நீங்கள்தான் கார் டிரைவரா ......புதியவரோ......காரின் கதவைத்திறந்து உள்ளே ஏறியபடியே கேட்டாள் வனஜா ...... இல்லை நான் கம்பெனியில் ஓர் உத்தியோகஸ்தன். அப்பா நேற்றிரவு அவசரமாக கோயமுத்தூருக்கு பழைய டிரைவருடன் சென்றதால் என்னை அனுப்பிவைத்தார்

ம்......ம்......சரி...... நான் நீங்கள் புதிய டிரைவரோ என நினைத்தேன். என சிரித்தபடியே கூறினாள்.

சேகர் காரின் டிரைவிங் சீட்டில் அமர்ந்து காரை ஓட்ட முனைந்தான். காரை ஸ்டார்ட் செய்து வேகமாக வே விட்டான்.

வனஜா அவனது அழகை அவனது எதிரே அமைந்துள்ள கண்ணாடியில் கண்டு ரசித்தாள். அழகான, மேன்மையான முகத்திற்கேற்ற அரும்பு மீசை, வாளிப்பான மூக்கு, கம்பீரப்பார்வை, சுருளான கிராப்பு.

அதேபோல்சேகர் அவளது உருவத்தைக் கண்ணாடியில் கண்டு ரசித்தான், பட்டிலும் மிருதுவான முகம், நல்ல அழகிய மூக்கு, கொவ்வைப் போன்ற உதடுகள், முத்துப் போன்ற வெண்பற்கள். அவள் கருப்புக் கண்ணாடி அணிந்திருந்தாள்.

தன்னை உற்று நோக்குவதை அவளால் அறிந்துக் கொள்ள இயலவில்லை.

கார்மெல்ல இரண்டு, மூன்று திருப்பங்களைத் தாண்டியது. வனஜாவே பேச்சைத் தொடங்கினாள். "நன்றாக கார் ஓட்டுகிறீர்களே"! கல்லூரிப் படிப்பை முடித்து விட்டீர்களோ?

ஏதோ நினைவில் கேட்டாள். "ஏதோ சுமாராக ஓட்டத்தெரியும், போனவருடம் தான் B. A. முடித்தேன்," வார்த்தைகள் திணறின. சீ! என்ன பேச்சு ஒரு பெண்ணிடம் நமக்கு? கையை உதறிக் கொண்டான், ம் தங்கள் பெயர்...

சேகர்...அதற்குள் கார் பங்களாவை அடைந்தது. காரிலிருந்து வனஜா இறங்கியவுடன், காரை போர்டிகோவில் நிற்கவைத்துவிட்டு விரைந்தான் சேகர் அலுவலகத்திற்கு...

* * *

மெல்ல புரண்டாள்; தனது எலும்புக் கூடு உடம்பு மிகுந்த வலியைத் தந்தது.

"கண்ணம்மா!... மணியார்டர் வந்திருக்கிறது" வாசலில் போஸ்ட்மேன் குரல் கொடுத்தான்.

"சேகர்தான் அனுப்பியிருப்பான். ஆமாம் என் மகன் தான் அனுப்பி இருப்பான்" உலர்ந்த நாக்கு சற்று

மணம், குணம் ஒருங்கே அமைந்த

மரகதம்

காபியை

உபயோகியுங்கள்

மொத்தமாயும், சில்லரை
யாயும் கிடைக்கும்
அன்டரும் வறுத்து
அரைத்து கொடுக்கப்படும்

K. ராமசாமி உடையார்,

பூரண உரிமையாளர்,

மரகதம் காபி ஒர்க்ஸ்

கரூர்.

உருள ஆரம்பித்தது. எழுந்திருக்க முயன்ருள். முடியவில்லை.

அவளது நிலையைக்கண்டு போஸ்ட்மேன் உள்ளேவந்து 20 ரூபாயைத் தந்துவிட்டு, கைவிரலின் பதிவைப் பெற்று, சேகர் எழுதியிருந்ததை படித்துக் காட்டினன்.

சே... என்ன பிள்ளைகள்... இந்த நிலையில் கூட வரக்கூடாதா? அப்படியென்ன வேலையது?

அப்பா! அவன் இப்போது தான் வேலையிலமர்ந்திருக்கிருன். எவ்வளவு கஷ்டங்களோ அவனுக்கு!

போஸ்ட்மேன் சிரித்தபடியே உயிர்போகும் நிலையிலும் பரிந்துத்தனது மகனுக்காக பேசுவதைக் கண்டுவியந்து நடையைக் கட்டினன்!

* * *

மாலை நேரம், மணி 4 ஆகிவிட்டது இன்னும் அரை மணி நேரத்தில் அலுவலக வேலைகள் முடிந்து விடும். அதுபோது சர்ரென்றபடியே கார் ஒன்று வந்துகாரியாலய வாசலில் நுழைந்தது. எல்லோரும் முதலியார் தான் வருகிருரோ என அச்சமுற்றனர். ஆனல் இறங்கியது வனஜா தான்.

இறங்கி நேராக உள் சென்று சேகரின் அறையை அடைந்து ஹலோ! மிஸ்டர் சேகர்! அப்பாவிடம் இருந்து ஏதாவது லெட்டர் வந்ததா!

கேள்வி அவனுக்கு ஆச்சரியமாகவே காணப்பட்டது. ஒன்றும் வரவில்லையே! நிற்கறீர்களே! அருகில் இருந்த

ஆசனத்தைச் சுட்டிக்கொட்டினன்.

பதிலுக்கு வனஜா "தாங்க்ஸ்" இதன் விஷயமாகவே வந்தேன் சரி அப்பால் வருகிறேன். கருவண்டைப்போன்ற கரிய விழிகள்தான் கூறின, ஆமாம்! அவன் சொன்னதைக் கேட்கவே இல்லை.

வேகமாக நடந்து திரும்பிப் பார்த்தாள். இன்னும் சேகர் நின்ற இடத்திலேயே நின்றுக் கொண்டிருந்தான்.

சேகர் அன்றிரவு தன்னையறியாத ஒரு இன்ப உணர்ச்சியுடன் படுக்கையில் சாய்ந்தான்...நாளைக்கு காலையில் செங்கற்பட்டு போக அன்று திட்டம் போட்டிருந்தான்.

அன்றிரவுதான் முதலியாரும் வந்து சேர்ந்தார். மறுநாட்காலை சேகர் முதலியாரின் வீட்டிற்குப் புறப்பட்டான் அன்றைய லீவு கேட்பதற்காக.

முதலியாரிடம் தனது தாய்க்கு உடல்நிலைசரியில்லையென்றும், தான் அவசியமாக போக வேண்டும் என்றும் கூறி ஒரே ஒருநாள் லீவு தரும்படி வேண்டினன்.

லீவு கிடைத்தது. சேகர் வீட்டையடைந்து புதிய ஆடைகளை அணிந்து வெளியே வந்தான். ஒரே ஆச்சரியம்! அவனுக்கு அவனது வீட்டெதிரே வனஜா காருடன் காத்திருந்தாள்!

"ஹலோ குட்மானிங் சேகர்"

குட்மார்னிங்...சேகரும் பதில் வணக்கம் செலுத்தினன். நான் என் சினேகிதி வீட்டிற்குப் போகிறேன்... நீங்கள் ஸ்டேஷனுக்குத் தானே செல்ல வேண்டும்?... நான் உங்களை அங்கே இறக்கி விடுகிறேன். தங்களுக்கு ஆட்சேபணை இல்லாவிட்டாள் ஏறிக் கொள்ளலாம்.

சேகரும் காரில் ஏறி அமர்ந்தான். தற்போது வனஜாவே காரை ட்ரைவ் செய்தாள்.

சேகர் வியந்தபடியே அவளது அழகைக் கண்ணாடியில் கண்டு ரசித்தான். ஏது நீயும் காரைவிடுகிருய் என்ருன்.

என் பெண்கள் மட்டும் ஆணுக்கு சளைத்தவர்களா? முறுவலித்தான் சேகர். அவளின் பேச்சைக் கண்டுரசிக்கவில்லை. அவளின் பேச்சின் குர

லைக் கேட்டுத்தான் ரசித்தான்.

ஸ்டேஷன் வந்தது. சேகர் முதலிலேயே இறங்கினன் காரை விட்டு. அப்போது வனஜா தனது டம்பப் பையைத்திறந்து அவன் விட்டுச்சென்ற மோதிரத்தைக் கொடுத்தாள்.

ஆமாம்! முதலாளியின் வீட்டிலேயே அது விழுந்து விட்டது. அவன் அதை வாங்குவதைவிட அவளின் பார்வையையே ரசித்தான். மோதிரத்தை அவளே விரலில் அணிவித்தாள். புதுமையான ஒரு சிலுசிலுப்பு அவளது உள்ளத்தே ஏற்பட்டது. இருவரும் டிக்கட் ரூமிற்கு சென்றனர். சேகர் டிக்கட் வாங்குவதற்கும் ரெயில் புறப்படுவதற்கும் சரியாக இருந்தது.

சேகர் ரயிலில் வனஜாவிடம் விடைபெற்றுக்கொண்டு ஏறியபடியே உட் சென்ருன். ரயில்ஓடிமறைந்தது. அது மறையும் வரை வனஜா நின்று விட்டு காரைஸ்டார்ட் செய்தாள்.

சென்று அமர்ந்த சேகர் விரலில் அவள் அணிவித்த மோதிரத்தைப் பார்த்தான். அது அவனின் இன்ஷியல் அல்ல V என்று போட்டிருந்தது. ஆமாம் வனஜாவினுடையது தான் அது.

வெற்றி பெருமிதத்தோடும், குதிகொள்ளும் சந்தோஷத்துடனும் சேகர் தன்னைமறந்து கண் மூடினன்.

சேகர் செங்கற்பட்டில் இறங்கும்போது நன்பகல். மணி இரண்டிருக்கும். வீடிருப்பது கொஞ்ச தூரமாகையால் நடந்தே சென்ருன். வீட்டையடைந்ததும், தனது தாயின் நிலைக்கண்டு துடித்தான். அவள் "சேகரா" நீயா? கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதைப் போலிருந்தது. ஓடினன் சேகர் டாக்டரை அழைத்துவர. டாக்டருடன் வந்தான். தனது தாய் இறந்துவிட்டிருந்தாள்! ஆம்! உயிர் உடலைவிட்டு அகன்று விட்டது. கதறினன், துடித்தான். அன்று வனஜாவை அழைத்துவரச் செல்லாதிருந்தால் இன்று தனது தாய் சுகமாக இருப்பாளே! ஐயோ! நெஞ்சு வெடிக்க கதறினன், புரண்டான் மீண்டும் பெங்களூர் திரும்பினன் துன்ப உள்ளத்தோடு, துயர முகத்தோடு, மூன்று நாட்களாய் விம்மினன்......மாண

டவர் மீளார்...... என்று படித்தும், அறிந்தும், உணர்ந்தும் கதறினன் பாசத்தால்-தாயின் மீதுக் கொண்ட பற்றுதலால்.

காரியாலயத்தில் சரிவர வேலை செய்வதில்லை. முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு ஒரு பழைய பைலை புரட்டிக்கொண்டிருக்கும்போது எஜமான் தங்களை வரச்சொன்னர் என ஒருவன் வந்து கூறினன்!.

· என்னை அழைத்தாரா! ஏன்? ஐயோ! வேலையில் ஏதாவது பிழைகள் நேர்ந்துவிட்டனவா! துயரத்திற்கு மேல் துன்பம், பட்டகாலிலேயே படுகின்றதே, நெஞ்சு திக் திக்கென பயத்தால் நடுங்கியது.உயிரே போவது போன்ற நிலை ஏற்பட்டது.

நேராக முதலியாரின் வீட்டையடைந்ததும், முதலியார் அங்கில்லை வனஜா தான் அமர்ந்திருந்தாள். அவனைக் கண்டதும் அமரச்செய்து.

சேகர்...படித்த நீங்களே இப்படி துன்பப்பட்டால் படியாதவர்கள் துன்பப்படுவது சாதாரணமானதுதானே அழுதால் மட்டும் திரும்பி வந்துவிடுவார்களோ? சாவதும், பிறப்பதும் உலக வழக்குதானே! சாவது இல்லையேல்பிறத்தல் இல்லை. பிறத்தல் இல்லையேல் சாதல் இல்லை அல்லவா என அவனது மனக் கவலைக்கு அவளே மாற்று கூறித் தேற்றினள்.

முதலியார் வந்ததும் வனஜா ஓடிவிட்டாள். முதலியார் சேகரை உற்று நோக்கிசேகர் நான் ஒன்று கேட்கிறேன் உறுதியாக பதிலளி. ஆமாம், திருமணம் செய்து கொள்ளவிரும்புகிருயா!

எனக்கா! இந்நிலையிலா!

ஆம் ஏன் நான் உனக்கு மணம் முடிக்கிறேன்.ஆமாம் என் பெண் வனஜாவை மணந்து கொள்...... சம்மதமா.........

......ம்...... நான் ...... ஓர் அனதையாயிற்றே, உறவினர் உற்ருர் கிடையாதே?

......ம்...... நல்லவர்களுக்கு எல்லோரும் உற்ருர் உறவினர்தாம். ஏழையென்ரு ஏதுமில்லாதவன் என்ரு எண்ணுதே!

எனது சொத்தெல்லாம் உனக்குத்தான் சரி......நல்ல

நாள் பார்த்து முகூர்த்தம் நடக்க ஏற்பாடு செய்கிறேன்

......நன்றி கூற க்கூட நாக்கெழவில்லை...... வருகிறேன் எனக்கிளம்பினான் சேகர். வீட்டையடைந்ததும் மற்றொரு ஆச்சரியம்,ஆமாம்! வனஜா அவனுக்குத் தகுந்த புதிய ஆடைகளுடன் நின்றிருந்தாள்......ஆமாம்! அவனுக்காக வாங்கி வந்திருந்தாள்.

சேகர் வியப்புடன் "வனஜா எனக்கா இவையெல்லாம்?

"ஆமாம், உமக்கேதான்"

"நாம் இருவரும் ஒரே மனத்தினராவோம். நம்மிடையில் பேதமில்லை. எனக்கு இந்த உலகத்தில் ஒரே துணையாய் இருந்தவள் என் தாய். அவள் மறைந்தாள். அவளுக்குப்பின் உன் துணை எனக்குக்கிட்டியது. அவள் என்னைப் பெற்றவள். நீ என்னை அடைந்தவள்" என்ருன். அப்போது அவன்கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

பிளாக்குகள் ?

ஆப்டோன், லைன், மூவர்ண பிளாக்குகள், ரப்பர் ஸ்டாம்புகள் திறமையாயும், நீண்டகால அனுபவத்தின் பேரிலும் தயாரிப்பவர்கள்.

"தொழில்" பத்திரிகையில் காணும் பிளாக்குகள் யாவும் சன்பிராஸஸில் தயாரித்தவையே! உங்கள் தேவைக்கு அணுகுங்கள்

சன் பிராஸஸ்

220/221, வால்டாக்ஸ் ரோடு,

சென்னை-3.

செய்திகள்

சிறுவனை விழுங்கிய மலைப்பாம்பு

சேலம் ஜில்லாவைச் சேர்ந்த ஆத்தூரை அடுத்துள்ள கல்வராயன் மலையில் பயங்கரமான மலைப் பாம்பு ஒன்று இருந்தது. அது அடிக்கடி ஆடு, மாடுகளை விழுங்கி வந்தது. அதன் நீளம் 16 அடியாம். அந்தப் பாம்பு சமீபத்தில் ஒரு சிறுவனையே விழுங்கி விட்டது.

ஆத்தூரைச் சேர்ந்த கோவிந்தராசு (வயது 30) என்பவர் எப்படியும் அந்தப்பாம்பை பிடித்து விடவேண்டும் என்ற உறுதியுடன் புறப்பட்டவர், பாம்பைத் தேடி பல இடங்களில் அலைந்தார், கிடைக்கவில்லை.

நள்ளிரவு நேரம் கையில் விளக்குடன் பாம்பைத் தேடி அலைந்தார். கடைசியில் ஒரு இடத்தில் 'சலசல' சத்தம் கேட்டது. உன்னிப்பாகப் பார்த்தார். ஒரு மரத்தடியில் அந்தப்பாம்பு முயல் ஒன்றை விழுங்கிக் கொண்டிருந்தது. இவ்வளவு பயங்கரமான பாம்பை நாம் எப்படிப் பிடிப்பது! யாரும் துணையில்லையே என்று எண்ணினார். பாம்பு நழுவப் பார்த்தது. அவர் துணிச்சலுடன் தன்னுடன் கொண்டுவந்திருந்த வலையை அதன் மீது வீசினார். வலையில் பாம்புவகையாகச்சிக்கிக் கொண்டது. பாம்புடன் புரண்டு அதனைச் சரியாகப் பிணைத்துக் கட்டி அப்படியே கிராமத்திற்கு கொண்டுவந்து விட்டார். தன்னந்தனியே சென்று மலைப் பாம்பைப் பிடித்துவந்த அவரை அனைவரும் பாராட்டினர்.

———

மாற்று இருதயம்

தண்ணீர் உறையும் உஷ்ண நிலைக்குக் கீழே ஒரு நாயின் இருதயத்தைக் குளிரவைத்து, பிறகு அதை மற்றொரு நாய்க்குப் பொருத்தி வேலை செய்யவைக்க இங்கு டாக்டர்கள் ஒரு புதிய முறையைக் கண்டு பிடித்திருக்கின்றனர். இதேபோல் மனித உறுப்புக்களையும்பாதுகாத்துவைத்து தேவைப் படும்போது மற்றவர்களுக்கு உபயோகிக்கலாமென்ற நம்பிக்கை அதிகரித்திருப்பதாக டாக்டர்கள் கூறுகின்றனராம்.

நீச்சல் குளங்களில் இனி நிறபேதம் இல்லை

பம்பாய் பீச் காண்டி நீச்சல் குளத்திலும், அந்த ராஜ்யத்திலுள்ள இதர நீச்சல் குளங்களிலும் நிற பேதம் அனுஷ்டிக்கப்படுவதை கைவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென தான் பம்பாய்ச் சர்க்காருக்கு அறிவித்துள்ளதாக மத்ய மந்திரி ஸ்ரீ பந்த்ராஜ்ய சபையில் அறிவித்துள்ளாராம்.

பண்டிட் நேருவின் வாரிசு!

ஸ்ரீ நேருவுக்கு அடுத்தபடி பிரதம மந்திரி யார் என்று அடிக்கடி கேட்கப்படுகிறதல்லவா? ஸ்ரீமதி இந்திரா காந்தி காங்கிரஸ் அக்ராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இதில் உருப்படியான ஒரு வளர்ச்சி என்று சோஷலிஸ்ட் தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோகியா நிருபர்களிடம் கூறினாராம். ஸ்ரீமதி இந்திரா சுதந்திரப்போரில் முன்னணியில் இருந்தவர். நல்ல பிரதம மந்திரியாகவும் அவர் விளங்கக்கூடுமென்றும் கூறினாராம்.

புதிய உருக்கு ஆலைகள்

ரூர்கேலாவிலும், பிலாயிலும் ஊது உலைகள் (பிளாஸ்ட் பர்னஸ்) வேலை செய்ய ஆரம்பித்துவிட்டன. ரூ 439 கோடி செலவில் 3 உருக்கு ஆலைகளை நிர்மாணிக்கப்பட்டுள்ளன. 2-வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் ரூர் கேலாவுக்கு ரூ. 128 கோடியும் பிலாய்க்கு ரூ. 110 கோடியும் துர்க்காபூருக்கு 115 கோடியும் ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்டன.

ஆனால் அந்தத் தொகை போதாதென்று 1957-ம் ஆண்டு ஆகஸ்டில் லோக சபையில் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் வருமாறு: ரூர் கேலா ரூ 170 கோடி: பிலாய் ரூ 131 கோடி: துர்க்காபூர் 138 கோடி.

இம்மாதிரி ராட்சஸ ஆலைகள் பெருக்கினால்தான் நம் நாடும் உலகமார்க்கெட்டில் இடம் பெற முடியும்.

இந்தியாவின் கல்வி நிலை

இந்தியாவில் எழுதப் படிக்கத்தெரிந்தவர்களைப் பற்றிய புள்ளி விபரங்களை

மத்திய அரசாங்கக் கல்வி மந்திரி அறிவித்துள்ளார்.

1958-ம் வருஷத்தில் முறையே ஆண்கள் 6-15 கோடியாகவும், பெண்கள் 1-88 கோடியாகவும் இருந்தனர்.

1947-ம் வருஷத்தில் ஆண்கள் 3-87 கோடியாகவும், பெண்கள் 1-20 கோடியாகவும் இருந்தனர்.

புகைபிடிக்கும் தாய்மார்களுக்கு பிறக்கும் குழந்தையின் நிலை

கருவுற்றிருக்கும் பெண்கள் அதிகமாக சிகரெட்டுகள் பிடித்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் மிகச்சிறியவையாகவும், எடையில் குறைந்தும் இருக்குமென்று பர்மிங்காம் சர்வகலாசாலை சமூக விஞ்ஞான இலாகா வெளியிட்டுள்ள அறிக்கையொன்று கூறுகிறது.

ஷை சர்வகலாசாலை இதனைப்பற்றி ஆராய்ச்சி நடத்தியுள்ளது. பிரசவ ஆஸ்பத்திரியில் டாக்டர் சி. ஆர். லோ சுமார் ஆயிரம் பெண்களைப் பரிசோதித்து இம்முடிவுக்கு வந்திருக்கிறார். பேர்ஷாக்கு தாயிடமிருந்து கருவில் வளரும் சிசுவுக்குச் செல்வது பாதிக்கப்படுகிறது என்று கூறியுள்ளார்.

பெங்களூரில் ஓர் பீம சேனன்

சாப்பாட்டு போட்டியில் 40 வடைகளையும் 20 போண்டாக்களையும் லபக் லபக் என்று விழுங்கினார் திம்மராஜ் என்கிற வாலிபர்.........

இந்தச் சம்பவம் பெங்களூரிலுள்ள கலாசிபாளையம் மெயின் ரோடிலுள்ள ஓட்டலில் நடந்ததாம். திம்மராஜும், அவர் நண்பர் ராமனும் ஓட்டலில் நுழைந்ததும், ராமன், டேய் திம்மா எத்தனை போண்டாவடை சாப்பிடுவாய் என்று கேட்டானும். அதற்கு திம்மராஜ், என்னசும்மா 30 வடையும், 15 போண்டாவும் சாதாரணமாக உள்ளே தள்ளுவேன். பந்தயம் பிடித்தால் இன்னும் தள்ளுவேன் என்றார். போடா முட்டாள் உன்னால் முடியாது என்று ராமன் சொன்னான். பந்தயம் வை. சாப்பிட்டுக் காட்டுகிறேன் எனவும், ராமன் சம்மதிக்க, சளைக்காமல் 40 வடையும், 20 போண்டாவையும் திம்மராஜ் லபக் லபக் என ஆவோகனம் செய்ததல்லாமல் ஒரு பானை தண்ணீரையும் குடித்துவிட்டான். எப்படி நம் கலியுக பீமன்!

வடநாட்டு ராமவிரோதிகள்

ஜப்பல்பூரில் நிலைமை பரப்ரப்படைந்திருக்கிறது. இரு இடங்களில் தீயிட முயற்சிக்கப்பட்டது ஒரு ஜெயின் கோவிலிலிருந்து விக்ரகங்கள் அகற்ற முயற்சிக்கப்பட்டது.

இது செய்தி

ஒரு ஜைன சஞ்சிகையில் ராமர் சீதை பற்றி எழுதப்பட்டிருந்த கட்டுரையைத் தொடர்ந்து பரபரப்பு நிலைமை எற்பட்டது. ராமரையும், சீதையையும் பழித்து அக்கட்டுரை எழுதப்பட்டிருக்கிறதாம். அந்த சஞ்சிகையின் 1500 பிரதிகளை போலீஸார் கைப்பற்றினர்.

நகரத்தில் இரவிலிருந்து காலைவரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு போலீஸ் காவல்வைக்கப்பட்டது. சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீண் சச்சரவு ஏற்படுவதைத் தடுப்பதற்காக தலைவர்களின் கூட்டத்தை அதிகாரிகள் கூட்டினார்கள். அமைதியாக இருக்கும்படி ஜனங்களை கேட்டுக்கொள்ளப்பட்டது, ஜனசங்கத்தலைவர்கள், நகர சபை மெம்பர்கள் கூட்டுவேண்டுகோள் வெளியிட்டனராம்.

வடநாட்டில் ராமரையும், சீதையையும் அவதூறு பண்ணியதின் பலன் இப்பேர்ப்பட்ட கலகத்தில் முடிந்தது. தமிழ் நாட்டில் போலீஸ் பாதுகாப்போடு ராமர், சீதை அவதூறு நாடகம் ஒரு ஊர் கூடவிடாமல் நடத்தப்பட்டது, புத்தகம் வெளியிடப்பட்டது. பிரச்சாரம் நடத்தப்பட்டது.

எழுத்துக்கலையின் பிறப்பு

முதன்முதலில் எழுத்துக் கலையைக் கண்டுபிடித்தவர்கள் மெஸபொடோமியர்களாம், சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு அந்நாட்டுபழங்குடிகள் செய்த சாதனை இன்றுமாத்திரமல்ல, இனியும் பல்லூழிகாலம் உலகத்தை இயக்கிக் கொண்டிருக்கும்.

சிந்துக்கரையிலிருந்தவர்கள் ஆயிரம்ஆண்டுகளுக்குப் பின் மெஸபொடோமியர்களிடமிருந்து அந்தக்கலையைக் கற்றனராம். அதன்பின் சில நூற்றுண்டுகள் சென்று எகிப்தியர் அதைஅறிந்தனராம்.

இவ்வாறு புதைப்பொருள் ஆராய்ச்சி நிபுணர் ஸர் மார்டிமர் வீலர் சென்னையில் கூறினார்.

கருத்துரை :

பாண்டித் தேவன்

நாடு முன்னேற பலர் நல்ல தொண்டு செய்வதுண்டு; நல்லதைக் கெடுக்க சிலர் நாசவேலையும் செய்வதுண்டு. படத் தயாரிப்பிலும் பலர் நல்ல தொண்டு செய்து நாடு முன்னேற வழி கோலுகின்றனர். அவர்களிலே முதன்மையானவர் பழம் பெரும் டைரக்டரான கே. சுப்பிரமணியம்.

நாட்டின் சுபிட்சமான வாழ்வுக்கு அணைக்கட்டுகள் பெரிதும் தேவை. அவற்றை நாம் உயிரைக் கொடுத்தும் காத்துப் பேணவேண்டும். திரு சுப்பிரமணியம் அவர்கள் அணைக்கட்டு ஒன்றை மையப் பொருளாக வைத்துக் கொண்டு அதை வெற்றியுடன் கட்டி முடிக்கத் தன்னுடைய உயிரையும் பணயம் வைத்துப் பணியாற்றத் துணியும் ஓர் என்ஜினியரை -எதிர்கால இந்தியாவின் வழிகாட்டியாக நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறார். நாடெங்கும் அணைக் கட்டுகள் கட்டிக் கொண்டு வரும் நமது அரசாங்கத்துக்கு சுப்பிரமணியத்தின் பாண்டித்

தேவன் ஓர் அரிய பிரச்சார சாதனம்.

பலனுள்ள, தேவையான இப்படத்தின் கதையை சிறப்பாக அமைத்திருக்கிறார். கடமையையும் காதலையும் பிணைத்து கதையைச் சுவையுடன் அமைத்திருக்கிறார். என்ஜினியர் ரெத்தினம், அவன் தந்தை பாண்டித்தேவன், மீனா, எலிஸா, கருப்பையா, நீலா போன்ற பாத்திரங்கள் நெஞ்சினை விட்டு நீங்காதவர்கள். அவர்களின் வாழ்க்கைப் போக்கு பண்பட்ட நெஞ்சம் நினைத்து நினைத்துப் பூரிப்புடைய வேண்டியதாகும். பாத்திரங்களின் அறிமுகம் வெகு அருமையாக கையாளப்பட்டிருக்கின்றது. அதற்கேற்றார் போல் முகவை ராஜமாணிக்கம் எளிமையான முறையில் ஆனால் கருத்தோட்டமுள்ள வசனங்களை அழகாக எழுதி இருக்கிறார்.

"சொல்லுறதை சொல்லிப் புட்டேன்" என்ற கல்யாண சுந்தரத்தின் பாட்டுடன் அறிமுகமாகும் சந்திரபாபு கடைசிவரை படத்துக்குஜீவனளிக்கிறார். தேடித் தேடி அலைந்தாலும் சந்திரபாபுவைப்போல் ஓர் நடிகன் கிடைப்பாரா? பாபுவின் நடிப்புக்காக எத்தனை முறை வேண்டுமானாலும் பார்க்கலாமே!

மீனாவாக சரோஜா நடிக்கிறார். முதிர்ந்த அனுபவ முத்திரை அவருடைய நடிப்பில் பளிச்சிடுகிறது.

ராஜசுலோசனா மட்டும் என்ன? மீனாவையும் ரத்தினத்தையும் இணைத்து வைப்பதாக சத்தியம் செய்துவிட்டு பிறகு தன்னைக் காதலிப்பதாக கூறும் ரத்தினத்திடம் தன் இதய வேதனையை வெளிச்சொல்ல முடியாமல் துடிக்கிறாளே! அந்தத் துடிப்பில்தான் எவ்வளவு ஜீவன் வழிந்தோடுகிறது!

கதாநாயகன் என்ஜினியராக பாலச்சந்தர் நடிக்கிறார். ராகினி ஆங்கிலப் பெண் உடையிலேயே கடைசிவரை காட்சி அளித்துவிட்டு பாபுவுடன் நடனம் ஆடுகிறார்.

மற்றவர்கள்—? கொடுத்த பாகத்தை குறையின்றி செய்திருக்கின்றனர்.

படத்தின் ஜீவனே ஒளிப்பதிவில் தான் ஊசலாடுகிறது. ராஜகோபாலின் வெளிப்புற காட்சிகள் பார்க்க பார்க்கத் தெவிட்டாதவை. ரத்தினம் ஓட்டிக் கொண்டு போகும் லாரியை யானை இடைமறித்து துதிக்கையால் சோதனை போடும் காட்

வெற்றி முழக்கமிடும் பாண்டித்தேவனில் பி.எஸ். சரோஜா

பகுதிகளில்
ளும் வெகு
க்கின்றன.

ணியத்தின்
த்துக்கு
. முதிர்ந்த
?

ல் கருத்து
ண்டுரங்கத்
'பு காதுக்கு

நல்ல கருத்தினை அடிப்படையாகக் கொண்டு நாட்டுக்குத் தேவையான அருமையானதோர் திரைப்படத்தைத் தயாரித்திருக்கிறார் திரு. சுப்பிரமணியம். போற்றத் தகுந்த இந்த தயாரிப்பு நாட்டினரால் மட்டுமல்ல, அரசாங்கத்தாரால்கூட போற்றப் படவேண்டியது.

—சோ. க.

தமிழ்நாடு அரசு ... காப்பக ...
208364

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

* இந்தியத் திரை உலகுக்கு ஓர் கலங்கரை விளக்கம் சாந்தாராம்! அவருடைய படைப்புக்கள் அத்தனையும் வெற்றிமுழக்கம் செய்தவை. அவற்றிலே ஒன்றுதான் 'சுரங்' என்ற படம். பாடுபடும் ஏழைத் தொழிலாளர்களை வெறிபிடித்த முதலாளிவர்க்கம் எவ்வளவு அலட்சியப் படுத்துகிறது என்பதையும், தொழிலாளர் சமுதாயம் நினைத்தால் எதையும் சாதிக்கமுடியும் என்பதையும் எடுத்துக்காட்டும் அற்புத திரை ஓவியந்தான் சாந்தாராமின் 'சுரங்'.

அதை அடிப்படையாகக் கொண்டுதான் ரெங்கா பிக்சர்ஸார் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற படத்தை தயாரித்து வருகின்றனர்.

ஏழைத் தொழிலாளர்களின் ரத்தத்தைக் கசக்கிப் பிழியும் முதலாளியாக M. R. ராதா நடிக்கிருர் என்ருல் படத்தின் வெற்றிக்கு கேட்கவேண்டுமா!

அவருடைய மகன் டாக்டராக பிரேம் நஸீர் நடிக்கிருர்.

தொழிலாளிகளின் தெய்
போல் போற்றப்படும் அ
யாக ஈ. வி. சரோஜா ந
ருர். நளினமும் நடனமும்
த்துக்கு உயிரூட்டக்
யவை. நகைச் சுவை
காகா ராதாகிருஷ்ண
சாயிராமும் இருக்கின்
வயிறு தாங்குமா? சிரி
சிந்திக்கவைக்கும்
மூர்த்தியின் வசனங்
யத்தை இளகவைக்
வநாதன் — ராமமூ
இசை யமைப்பு!
கொள்ளை கொள்ளு
கோட்டையாரின்
இவை போதா
ராமண்ணா டைரக்
தயாரிப்பாளர்
ஷ்ண ரெட்டியா
பகலும் இ
உழைத்து படத்
முழக்கம் செய்
கிருர். நல்லவர்
ணம் ஆசைக்க
மேபழுதான எ
ராமகிருஷ்ண
சலியாத உ
வாகிக் செ
'ஒன்று
வாழ்வு'
திரைக்குவ

Edited & Published by K. Perumal
55, Edapalayam Street, Madras-3. Asst. Edit
Printed by K. N. Thiruvengada
at his Ananda Parvathi Press, 30, Edapalay